பக்கங்கள் எட்டு
விலை ரூபா 5-00
Registered as a News Paper in SriLanka

# வலம்புரி
## VALAMPURI

அசல் 22 கரட் தங்க நகைகளுக்கு யாழ் நகரில் சிறந்த ஸ்தாபனம்
**அர்ச்சனா ஜுவலர்ஸ்**
118, கஸ்தூரியார் வீதி,
176/1, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்:
(கி-2127)

சங்கு 02 வள்ளுவர் ஆண்டு 2032 ஆனி 09 சனிக்கிழமை (23-06-2001) தொலைபேசி: 3378 ஒலி: 194

## ★ நம்பிக்கையில்லா பிரேரணை மூலம் அரசைக் கவிழ்த்தால்
★ புலிகளின் தடைநீக்கம் ★ யுத்த நிறுத்தம் ★ சமாதானப் பேச்சு

# நிறைவேற்ற ஐ. தே. கட்சி இணக்கம்
# ஆதரவு வழங்க கூட்டணி சம்மதம்!

### செய்தியாளர் மாநாட்டில் சங்கரி

(நமது நிருபர்)

**நாட்டில் தற்போது கொழுந்துவிட்டெரியும் கொடிய யுத்தத்திற்கு முடிவுகட்டி, சமாதானப் பேச்சுவார்த்தையை விட்ட இடத்தில் இருந்து தொடர்வதற்கு ஐக்கிய தேசியக் கட்சி வாக்குறுதி அளித்துள்ளதால் அரசுமீது அவர்கள் கொண்டுவந்துள்ள நம்பிக்கை இல்லாத் தீர்மானத்திற்கு ஆதரவு வழங்க முன்வந்துள்ளோம்.**

இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணியின் சிரேஷ்ட தலைவரும், யாழ் மாவட்ட எம்பியுமான வீ. ஆனந்தசங்கரி நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாடொன்றில் தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது;

பொதுஜனஐக்கியமுன்னணி அரசு சட்ட விரோதமான ஆட்சியையே தொடர்ந்து நடத்தி வருகிறது. பேச்சுவார்த்தை மூலம் பிரச்சினையைத் தீர்க்க எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை.

சமாதானப் பேச்சுக்கு அனுசரணையாளராகச் செயற்பட்ட நோர்வேயின் சிறப்புத் தூதுவர் எரிக் சொல் ஹெய்மை அரசு விலத்தியுள்ளதுடன் நோர்வேயின் பங்களிப்

(8-ம் பக்கம் பார்க்க)



### கிழக்கில் ஆர்ப்பாட்டம்
### பேரியல் அஷ்ரப்பின் கொடும்பாவி எரிப்பு

(மட்டக்களப்பு)

அரசுக்கு திருமதி பேரியல் அஷ்ரப் தொடர்ந்தும்ஆதரவு வழங்குவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று கிழக்கு மாகாணத்தில் ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றது.

கல்முனை மருதமுனை சாய்ந்தமருது மாவடிப்பள்ளி

[8ம் பக்கம் பார்க்க]

### படையினரின் சூட்டிற்கு
### இரு இளைஞர்கள் பலி
### திருநெல்வேலியில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலிப் பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டுச்சம்பவத்தில் இரண்டு இளைஞர்கள் பலியாகியுள்ளனர்;

திருநெல்வேலி தலங்காவற் பிள்ளையார் கோயிலடிப குதியில்நேற்று

(8-ம் பக்கம் பார்க்க)

### ஐ. தே. கட்சி விரைவில் ஆட்சியமைக்கும்
### கட்சிக்காரர் நம்பிக்கை

(கொழும்பு)

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள அரசியல்நெருக்கடியில் தேசிய அரசு அமைக்க நாம் ஒருபோதும் உடன்பட மாட்டோம் நாட்டில் நீதி நிர்வாகத்தை ஏற்படுத்தி மக்களை சந்தோசமாகவாழவைப்பதே எமது நோக்கமாகும். என்று செய்தியாளர் மா நாட்டில் ஐக்கியதேசியக் கட்சித் தலை

(8-ம் பக்கம் பார்க்க)

## அரசு வீழ்ச்சியடையும் ஆபத்தில்லை
## அமைச்சர் டக்ளஸ் நம்பிக்கை

பொதுஜன ஐக்கியமுன்னணி அரசு அதிகாரத்தில் இருந்து கவிழ்க்கப்படுவதற்கு ஈ·பி டி பிஒருபோதும்துணை போகமாட்டாது ஈ.பி டி.பி அரசின் செயற்பாட்டில் நம்பிக்கை கொண்டுள்ளது இவ் அரசாங்கத்தைப் பாதுகாக்கும்வகையில்ஈ.பி டி'பிதனது சகல நடவடிக்கைகளையும் எடுக்கும் எனஅக்கட்சியின் செயலாளர் நாயகமும்; வடக்கின்புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சருமான கே.என்.டக்ளஸ்தேவானந்தா தெரிவித்துள்ளார்;

தற்போதைய அரசியல் நிலைமை குறித்து அவர் கருத்துத் தெரிவிக்கையில் இன்றைய அரசியலில்பல்வேறு கருத்துக்கள் பலவாறு தெரிவிக்கப்பட்டாலும் ஈ.பி டி பியைப் பொறுத்தவரை அரசாங்கத்துடனான அதன் நிலைப்பாட்டில் எதுவித மாற்றமும் இல்லைஎன்பதை உறுதிப்படுத்தினார்.



ஜனாதிபதியுடனோ அர

(8ம் பக்கம் பார்க்க)

## முக்கியமுன்னணிஅமைச்சர்கள்சிலர் கடைசி நேரத்தில் கட்சி தாவுவர்?
### அரசியல் வட்டாரங்களில் பரபரப்பு

(கொழும்பு)

அரசிற்கெதிராக ஐக்கியதேசியக் கட்சி கொண்டு வரும் நம்பிக்கை யில்லாப் பிரேரணைக்கு ஆதரவாக முக்கிய முன்னணி அமைச்சர்கள் சிலர் எதிர்க்கட்சி வரிசையில் அமர்வார்களென கொழும்பு அரசியல் வட்டாரங் களில் பரவலாகப் பேசப் படுகிறது.

அமைச்சர்களான றொனி டிமெல், டி.எம்; ஜயரட்ண விஜயபால மெண்டிஸ், அத்தாவுடசெனவிரத்தினா போன்ற முன்னணி அமைச்சர்களேஐக்கிய தேசியக் கட்சியின் நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு

(8ம் பக்கம் பார்க்க]

## நம்பிக்கையில்லாப் பிரேரணையை நேற்று
## 98பா.உ றுப்பினர்களின்ஒப்பத்துடன் கையளிப்பு

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசுமீதான நம்பிக்கையில்லாப் பிரேரணையை 98 பாராளு மன்ற உறுப்பினர்களின் கையொப்பத்துடன் ஐக்கியதேசியக் கட்சிநேற்றுப்பாராளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ளது;

இந்த நம்பிக்கை யில்லாத் பிரேரணையைஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் கரு ஜெயசூரியா, மற்றும் டிரோன் பெர்னான்டோ, தமிழர் விடுதலைக் கூட்டணியின் சிரேஷ்ட உபதலைவரும் யாழ் மாவட்டபாராளுமன்ற உறுப்பினருமான வி.ஆனந்த சங்கரி, அகில இலங்கை தமிழ் காங்கிரசின் தலைவரும் யாழ் மாவட்டபாராளுமன்ற உறுப்பினருமான அ விநாயகமூர்த்தி, ரெலோ அமைப்பின் தலைவரும், வன்னி மாவட்ட பாராளு மன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன். ஆகியோர் கூட்டாக இணைந்து பாராளு மன்ற செயலாளர் நாயகத்திடம் சமர்ப்பித்துள்ளனர்;

அரசில்இருந்துவெளியேறிய ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மக்கள் விடுதலை முன்னணி (ஜே. வி. பி ) சிஹலஉறுமய ஆகிய எதிர்க் கட்சிகள் இப்பிரேரணையில் ஒப்பமிடவில்லை எனவும்,தெரிவிக்கப் படுகிறது

சிறுபான்மை தமிழ்கட்சிகள் இதில் கையொப்ப மிட்டுள்ள

(8ம் பக்கம் பார்க்க)

### புலிகள்சுட்டதில் கான்ஸ்டபிள்பலி

மட்டக்களப்பு கல்முனை வீதியில் நேற்றுமாலை விடுதலைப்புலிகளின் பிஸ்ரல்குழுவினர் மேற்கொண்ட துப்பாக்கிச்சூட்டில் மோட்டார் சைக்கிளில் சென்ற பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் கொல்

(8ம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## விளக்க மறியல்

(மந்திகை)

மிருசுவில் ஒட்டுவெளிப் பகுதியில் சிப்பாய் ஒருவர் தன்னினச் சேர்க்கைக்குட்படுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என சந்தேகிக்கப்படும் இருவர் சாவகச்சேரி நீதிமன்ற நீதிபதி முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர்.

சந்தேக நபர்கள் இருவரையும் எதிர்வரும் யூலை 4 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்ற நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

(உ-23)

## இன்று கூட்டம்

(கொழும்பு)

மக்கள் விடுதலை முன்னணியின் மத்திய குழுக் கூட்டம் இன்று நடைபெறவுள்ளது.

நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஒன்றின் மூலம் இனவாத சக்திகளின் கோரிக்கைகளை வெல்வதற்கு இடமளிக்கக் கூடாது என்னும் கொள்கையினடிப்படையில் தமது இறுதித் தீர்மானம் இருக்கும் என்று ம.வி.மு.எம்.பி நந்தன குணதிலக குறிப்பிட்டார்.

இனவாத சக்திகள் தம்மால் அரசுகளை அமைக்கவும், தோற்கடிக்கவும் முடியும் என்று பெருமையடிக்கும் அரசியல் கலாசாரம் முடிவுக்கு வரவேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (உ

## இம் மாத இந்து சாதனம் வெளிவந்தது

(நல்லூர்)

யாழ்சைவ பரிபாலனசபையின் வெளியீடான இந்துசாதனம் செய்திப் பத்திரிகை வெளிவந்துள்ளது.

சமாதானப் பேரவையின் மகஜர், ஓர் அவசரத்தேவை, சைவபரிபாலன சபைத்தோற்றமும், வளர்ச்சியும்பணிகளும் அமரர் ஆறுமுகம் மகாலிங்கம் மறைவு, பன்னிரண்டு ஜோதிலிங்கத் தலங்கள், மெய்ச் சமயம் என்பன உட்படப்பலவிடயங்கள் இதில் வெளிவந்துள்ளன.

(உ-103)

## அரவம் தீண்டியது

(மந்திகை)

வீட்டின்வேலியருகே விளையாடிக் கொண்டிருந்த வேளை பாம்பு தீண்டிய சிறுமி ஒருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

துன்னாலை சலிசைச் சந்திக்கு அண்மையில் நடைபெற்ற இச் சம்பவத்தில்இதே இடத்தைச்சேர்ந்த கனகலிங்கம் ஜனனி (வயது 6) என்ற சிறுமியே பாம்பு தீண்டி பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(உ-23)

## ஐக்கிய இலங்கைக்குள் ஜனநாயக வழியிலான தீர்வையே மக்கள் தெரிவு செய்துள்ளனர்

### பிரி. தூதுவரிடம் டக்ளஸ் எடுத்துரைப்பு

(யாழ்ப்பாணம்)

கடந்த பொதுத் தேர்தலில், வடக்கு - கிழக்கில் வாழ்கின்ற தமிழ் பேசும் மக்கள் அளித்துள்ள வாக்குகளின்எண்ணிக்கையின்படி, தமிழ் மக்களின் அரசியற் பிரச்சினைக்கு ஐக்கியப்பட்ட இலங்கைக்குள் ஜனநாயக வழியிலான ஒரு தீர்வினையே தெரிவு செய்துள்ளார்கள்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இலங்கைக்கான பிரித்தானியத் தூதுவர் லிண்டா டபீல்டிடம் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்திற்கான, ஒரு நாள் விஜயத்தினை மேற்கொண்டிருந்த இலங்கைக்கான பிரித்தானியத் தூதுவர் லிண்டா டபீல்ட், ஈ.பி.டி.பியின் யாழ். மாவட்ட தலைமைச் செயலகத்தில், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவைச் சந்தித்து நேற்று முன்தினம் பேச்சு நடத்தினார்.

அவ்வேளை மேலும் குறிப்பிட்டதாவது.

அரசு மேற்கொள்ளும் புலிகளுடனான பேச்சு முயற்சிகளை வரவேற்கின்றோம். இப்பேச்சு முயற்சிகள் இரகசியப் பேச்சுக்களாக அமையாமல் பகிரங்கப் பேச்சு முயற்சிகளாக அமையவேண்டும்.

ஈ.பி.டி.பி தமிழ் பேசும் மக்களின் அரசியற் பிரச்சினைக்கு ஜனநாயக வழிமுறைக்குள், நடைமுறைச் சாத்தியமான வழியில், ஐக்கியப்பட்ட இலங்கைக்குள் தீர்வாக, மத்தியில் கூட்டாட்சியையும் வடக்கு - கிழக்கு மாநிலத்தில் சுயாட்சியினையும் வலியுறுத்தி வருகிறது.

இத் தீர்வு உருப்பெறுவதற்கான அரசியல் முயற்சிகளை முன்னெடுக்கும் அதேவேளை, யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் நாளாந்தப் பிரச்சினைகளுக்கும் தீர்வு கண்டு வருகிறது.

இன்று முதல் இரவு நேர ஊரடங்கு அமுல்படுத்தப்படும் நேரத்தில் ஒரு மணி நேர தளர்வு ஏற்படுத்தியுள்ளோம். இதனையடுத்து, இனி இரவு 10 மணி முதல் ஊரடங்கு அமுல் செய்யப்படவுள்ளது. ஆனால் இத்தகைய நடவடிக்கைகள் மூலம் மக்கள் அமைதிநிலைக்கு திரும்புவதை விரும்பாத அரசியல்வாதிகள் எமது செயற்பாடுகள் பற்றி தவறான கருத்துக்களை மக்கள்மத்தியில் பரப்பி வருகின்றார்கள் என்றார்.

இதேவேளை, வடக்கில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி மற்றும் புனர்வாழ்வு, புனரமைப்பு பற்றியும்,

மிதிவெடிகள் அகற்றல் உட்பட வடபகுதியில்மேற்கொள்ளப்படும் அபிவிருத்தித் திட்டங்களிற்கு பிரித்தானிய அரசு புரிய வேண்டிய உதவி குறித்தும் அமைச்சர், தூதுவரிடம் விளக்கிக்கூறினார். (உ)

## குண்டுகள் மீட்பு

(கொழும்பு)

சரசாலைப் பகுதியில் கடந்த 20ஆம் திகதியன்று படையினர் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின் போது இரண்டு மோட்டார் குண்டுகள் கைப்பற்றப்பட்டு செயலிழக்கச் செய்யப்பட்டதாக விசேட ஊடகத் தகவல் நிலையம் விடுத்த அறிக்கையில் தெரிவித்துள்ளது.

(உ- 9)

## நிர்வாகசபை தெரிவு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் மூத்த விநாயகர் சனசமூக நிலைய வருடாந்தப் பொதுக் கூட்டமும் நிர்வாக சபைத் தெரிவும் அண்மையில் நடைபெற்றது.

தலைவராகக செல்வராசா, உப தலைவராக பொ. சிவபாதம், செயலாளராக சொ. மன்மதராஜலிங்கம் உப செயலாளராக இ. யோகராசா, பொருளாளராக இ. சிவபாலு மற்றும் 19 நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

(உ)

## பொதுக் கூட்டம்

(ஊர்காவற்றுறை)

வேலணை சேர் வைத்திலிங்கம் துரைசுவாமி மத்திய மகா வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்க வருடாந்தப் பொதுக் கூட்டம் நாளை மு.ப 10. 00மணிக்கு அதிபர் கு. கணேசலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

(உ- 75)

## உதை பந்தாட்டம்

(சுண்டுக்குளி)

இமையாணன் மத்திய விளையாட்டுக் கழகம்,லாலா சோப் ஸ்தாபனத்தின் அனுசரணையுடன்யாழ். மாவட்ட ரீதியில், யாழ் மாவட்ட அணிகளுக்கு இடையில், நடாத்தி வரும் உதைபந்தாட்டப் போட்டித் தொடரின் அரை இறுதி ஆட்டம், கடந்த ஞாயிற்றுக் கிழமை கழக விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

இந்த ஆட்டத்தில், பாஷையூர் எசன் அன்ரனீஸ் அணி அதனை எதிர்த்தாடிய குருநகர் பாடுமீன் அணியை பலத்த போட்டியின் பின் 2: 1 கோல் கணக்கில் வென்று இறுதி ஆட்டத்தில் ஆடத் தகுதிபெற்றது. (உ-110)

## மீனவர் விடுதலை விவகாரம் அமைச்சர் கவனத்திற்கு?

(யாழ்ப்பாணம்)

சட்ட விரோதமாக இலங்கைக் கடல் எல்லைக்குள் நுழைந்தார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு யாழ் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 50 இந்திய மீனவர்கள் தமது விடுதலை குறித்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கவனத்திற்குக் கொண்டு வருவதற்கு ஏற்ற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனக் கோரியுள்ளனர்.

மேற்படி மீனவர்களைப் பார்வையிடுவதற்காக நேற்று முன்தினம் யாழ். சிறைச்சாலை சென்ற யாழ்ப்பாணம் சத்திரத்துச் சந்தி ஞான வைரவர் ஆலய நிர்வாகத்தினர் மற்றும் வர்த்தகர்கள் 15 ஆயிரம் ருபா பெறுமதியான உணவு, உடை என்பவற்றை அவர்களுக்கு வழங்கினர்.

அச்சமயம் அவர்களுடன் கலந்துரையாடிய மீனவர்கள் தமது விடுதலை குறித்து தொண்டு நிறுவனங்கள் மற்றும்பொதுநிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு அமைச்சர்டக்ளஸ் தேவானந்தாவின் கவனத்திற்குக் கொண்டு வரும்படியும், தமக்கு ஏற்ற உதவிகளை தாம் எதிர்பார்ப்பதாகவும்தெரிவித்தனர்.

(உ- 6)


நல்லூர் பிரதேச சபை

### மின்பிறப்பாக்கி வழங்கல்

எமது பிரதேச சபைக்கு கீழ்க்குறித்த வகையான மின்பிறப்பாக்கி தேவைப்படுவதால் தகுதி வாய்ந்த வழங்குநர்கள் 28. 6. 2001 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக 'தலைவர் நல்லூர் பிரதேச சபை, திருநெல்வேலி' என்ற முகவரிக்கு விண்ணப்பங்களை அனுப்பி வைக்கவும்.

மின் பிறப்பாக்கி வகை:-

லிஸ்ரர் இங்கிலாந்து -Lister, England.

8 -10 KVA

3 phase.

(க. மணிபல்லவராஜன்)
தலைவர்,
நல்லூர் பிரதேச சபை.

[C-2136]





கோப்பாய்மத்தி - நாவலடி

திருவருள்மிகு

ஸ்ரீ மகாமுத்துமாரி அம்பாள் தேவஸ்தானம்

நவகுண்ட பக்ஷ்புனராவர்த்தனப் பிரதிஷ்டா

### மஹா கும்பாபிஷேக பெருவிழா

24 06-2001

கிரியாகால நிகழ்ச்சிகள்

ஆனி 9ம் நாள் (23-06-2001) சனிக்கிழமை

காலை 4-00 மணி முதல் மாலை 4-30 மணி வரை

தைலாப்யங்கம் (எண்ணெய்க்காப்பு சாத்துதல்)

புண்ணியாக வாசனம், விஷேட சந்தி, யாக பூஜை, ஹோமம், பூர்ணாகுதிகள், பிரதக்ஷிணம், வேத பாராயணம், வீபூதி பிரசாதம் வழங்கல்.

மாலை: 3-00 மணி முதல் விசேட சந்தி, யாகபூஜை, விம்பசுத்தி, மூர்த்திகள் ரக்ஷாபந்தனம், பூர்வ சந்தானம், பூர்ணாகுதி, வேதபாராயணம், சிவாச்சாரிய பூஷணம், வீபூதிப்பிரசாதம் வழங்கல்.

ஆனி 10ம் நாள் (24-06-2001) ஞாயிற்றுக்கிழமை

காலை: 6-00 மணிக்கு புண்ணியாக வாசனம், யாக பூஜை, மகா பூர்ணாகுதி, யாத்திராதானம், கும்பவீதிப் பிரதக்ஷிணம்.

காலை: 9 35—9 55 க்குள் திருதியை திதியும் பூச நட்சத்திரமும் சிங்கலக்கினமும் சித்த யோகமும் கூடிய சுபவேளையில் அம்பிகைக்கும் ஏனைய பரிவார மூர்த்திகட்கும், மஹா கும்பாபிஷேகம் நடைபெறும். தொடர்ந்து தசதர்சனம், ஆச்சாரிய சம்பாவலனைகள், ஆசியுரைகள், விபூதி திருவருட் பிரசாதம் வழங்கல்.

காலை: 10-00 மணிக்கு மகா அபிஷேகம் நடைபெறும்.

மாலை: 5-00 மணிக்கு விசேட வசந்த மண்டப பூஜையைத் தொடர்ந்து அம்பாள் பூந்தண்டிகையில் விசேட மங்கள வாத்தியங்களுடன் வீதியுலா வரும் காட்சி இடம்பெறும்.

அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்பாள்
தேவஸ்தானம்
கோப்பாய். தர்ம பரிபாலன சபை

[3271]

# அடுத்தகட்ட இராணுவ நடவடிக்கை தக்க தருணத்தில் ஆரம்பிக்கப்படும்

## பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் தெரிவிப்பு

[கொழும்பு]

தமிழீழ விடுதலைப் புலிகள் தமது நான்கு மாத யுத்த நிறுத்த காலத்தை, ஆயுத உபகரணங்களை சேகரித்துக் கொள்ளவும், பெருமளவான இளைஞர்களுக்கு ஆயுதப் பயிற்சியளிக்கவுமே பயன்படுத்தியுள்ளனரென்று இராணுவ புலனாய்வுத் துறையினரின் அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது:

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது;

யுத்த நிறுத்த காலத்தில் விடுதலைப் புலிகள் '20 மி : மி. பீரங்கிகள் மற்றும் பல பாரிய ஆயுதங்களை கொள்வனவு செய்துள்ளனர். அத்துடன் கடந்த இருவாரத்தில் கிழக்கு மாகாணத்தில் விடுதலைப் புலிகளால் படையினரின் 20 காவலரண்கள் தாக்கப்பட்டுள்ளன.

விடுதலைப் புலிகள் வில்பத்துக்காட்டுப் பகுதியில் நடத்திய ஏவுகணைத் தாக்குதலினால், வான் படை விமானங்கள் அனைத்தும் விமானத் தாக்குதல்களை தற்காலிகமாக நிறுத்தியுள்ளன என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதே வேளை, இராணுவத்தினர் அடுத்த கட்ட இராணுவ நடவடிக்கையை உரியவேளையில் ஆரம்பிப்பரென பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்தை தெரிவித்துள்ளமையும் இங்கு குறிப்பிடத் தக்கது; (இ)

## வருடாந்த மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி அருள்மிகு செல்லக் கதிர்காம ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது..

தொடர்ந்து பன்னிரண்டு நாட்கள் திருவிழா நடைபெற்று, எதிர்வரும் 4 ஆம் திகதி புதன்கிழமை தேர்த் திருவிழாவும், 5 ஆம் திகதி வியாழக்கிழமை தீர்த்தத்திருவிழாவும் நடைபெறவுள்ளன.

இவ் வருடம் முதன் முறையாக புதிதாக நாட்டப்பெற்ற கொடித்தம்பத்தில் கொடியேற்றப்படவுள்ளது; (செ)

## மிதிவெடியில் சிக்கி காலிழப்பு

(யாழ்ப்பாணம்)

வீடு துப்புரவாக்கிக்கொண்டிருந்த வேளை மிதிவெடியில் சிக்கியவர் தனது காலொன்றை இழந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்;

நேற்று முன்தினம் பி. ப 2. 30 மணியளவில் கிராம்புவில் சாவகச்சேரிப்பகுதியில் இடம்பெற்ற இச் சம்பவத்தில் கந்தையா மகாலிங்கம் (வயது- 52) என்பவரே காலை இழந்தவராவார். (உ-10)

## புலிகளின் தாக்குதல் படைவீரர் காயம்

(கொழும்பு)

வாழைச்சேனை கிரான் பகுதியில் கடந்த 20ஆம்திகதி விடுதலைப் புலிகள் மேற்கொண்ட மோட்டார் தாக்குதலில் இராணுவ வீரர்ஒருவர் காயமடைந்துள்ளதாக விசேட ஊடகத் தகவல்நிலையம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-9)

## இராசி பலன்

23-06-2001
[ஆனி 9, சனி]
துதியை பி:ப 2.12 வரை
புனர்பூசம் பி ப 4.33 வரை
இராகுகாலம் 8.54- 10 24
நல்லநேரம் 2.54- 4.24
சித்தம்.

**மேடம்**
உறவினர் மனஸ்தாபம், தேவையற்ற உறவு, பயந்த சுபாவம், அரச நன்மை;

**இடபம்**
காரிய நன்மை, அந்நியர் சந்திப்பு, குடும்ப சுகம், பிரயாணம்;

**மிதுனம்**
பொருள்விரயம், விவாதம், முயற்சி தாமதம், உஷ்ண நிலை.

**கடகம்**
ஜனவசியம், சயன சுகம், புதிய பொருள் சேர்க்கை, பிரயாணம்.

**சிங்கம்**
கோபப்படுதல். நித்திரைக் குழப்பம், தேவையற்ற செலவு, அலைச்சல்.

**கன்னி**
முயற்சி கைகூடும், சிநேகிதர் உதவி, தொழில்சிறப்பு, தனலாபம்.

**துலாம்**
உத்தியோக நன்மை, நல்ல சம்பவம், பணிவிடை, காரிய நன்மை,

**விருச்சிகம்**
பிரயாணம், பெரியோர் மனஸ்தாபம், வயிற்றுக் கோளாறு, காரிய தாமதம்.

**தனுசு**
எதிர்பாராத பிரச்சினை, பிரயாண பயம், முயற்சி தடங்கல், உடல் வியாதி,

**மகரம்**
சென்ற இடம் சிறப்பு, போசன சுகம், தனவரவு, சிநேகிதர் சந்திப்பு;

**கும்பம்**
ஆரோக்கிய நிலை, மன மகிழ்ச்சி, தொழில் விருத்தி, காரியம் கைகூடும்;

**மீனம்**
தாழ்வு நிலை, குடும்பப் பிரச்சினை, வியாதி, முயற்சி தாமதம்;

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது;)

வளவன்

## அவமதித்த அரசுக்கு நல்ல பாடம் புகட்டுவோம்

### ரவூப் ஹக்கீம் சூளுரை

(கொழும்பு)

தம்மை அவமானப்படுத்திய அரசுக்கு தாம் எதிர்க்கட்சியிலிருந்து தகுந்த பாடங்களைப் புகட்டத் தயாராகவுள்ளதாக ரவூப்ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

பம்பலப்பிட்டி முஸ்லிம் மகளிர் கல்லூரியில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் உரையாற்றும் போதே இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

முஸ்லிம் காங்கிரஸைப் பிளவு படுத்தும் அரசின் எண்ணத்திற்குத் தகுந்த பதிலடி கொடுக்கப்படும் எனவும், இந்நிகழ்வானது முஸ்லிம் சமுதாயத்தின் விடிவுக்கான பாதையைத் திறந்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (உ-8)

## நிபந்தனையுடனேயே ஜே. வி. பி. யின் ஆதரவு அரசுக்குக் கிடைக்கும்?

(கொழும்பு)

அரசுக்கு எதிராக ஐக்கிய தேசியக்கட்சி கொண்டுவரவுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணையை தோற்கடிப்பதற்கு ஏதுவாக மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி) அரசுக்கு ஆதரவு வழங்குமென கொழும்பு அரசியல் வட்டாரங்களில் பரவலாகப் பேசப்பட்டுவருகிறது.

நிபந்தனைகளுடனேயே அரசுக்கு ஜே. வி. பி ஆதரவு வழங்குமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

புலிகளுடன் சமாதானப் பேச்சைத் தொடரக்கூடாதெனவும், நோர்வேயின் சமாதான முயற்சியை நிராகரிக்க வேண்டுமென்பதும்அந் நிபந்தனையாக இருக்குமென்றும் அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்;

இதேவேளை ஜே. வி. பியின் மத்திய குழு இன்று கூடி அரசுக்கு ஆதரவு வழங்குவது தொடர்பாக முடிவெடுக்கவுள்ளது. (ந)

## அனலைதீவு- காவலூர் படகுச் சேவை சீரில்லை பயணிகள் அதிருப்தி

(ஊர்காவற்றுறை)

அனலை தீவுக்கும், ஊர்காவற்றுறைக்கும் இடையிலான படகுச்சேவை சீரில்லை என பயணம் மேற்கொள்வோர் புகார் தெரிவிக்கின்றனர்.

இப் பகுதிகளிற்கிடையிலான சேவையில் ஈடுபடுத்தப்படும் படகு அடிக்கடி கடல் நடுவே பழுதடைந்து விடுவதால், திருத்த வேலைகள் முடியும் வரை நடுக்கடலில் நின்று அச்சமுடன் பரிதவிக்க வேண்டிய நிலை காணப்படுவதாகவும் பாதிக்கப்படும் மக்கள் தெரிவிக்கின்றனர்;

இது இவ்வாறிருக்க, இப் பகுதிகளிடையே கடந்த வருடம் ஊர்காவற்றுறைப் பிரதேச சபையினால் நடாத்தப்பட்ட 'தேவரதம்' படகுச் சேவை இயந்திரப் பழுது காரணமாக இடை நிறுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது; (உ-75)

## மணிபல்லவத்தில் மஹோற்சவம் 3 ஆம் நாள்

## 'நயினை நாகபூஷணி அம்மன் பாமாலை'

### மீட்சிதா நயினைத்தாயே!

ஆதியும் அந்தமும் நடுவும் ஆனாய்
அகிலம் ஆளும் அன்னை ஆனாய்
சோதியும் வாழ்வின் துணையும் ஆனாய்
தூலமும் சூக்கும சக்தி ஆனாய்
பாதியும் பரமனின் பலமும் ஆனாய்
பக்தர் போற்றும் பைரவி ஆனாய்
மோதிடும் அலைகடல் போலத் துன்பம்
முட்டுதே மீட்சிதா நயினைத் தாயே!

நயினைச் சோதி

### அறியாமை போக்கிருவாய்!

மணி பல்ல வத்தீவின், மகிமைதனை அன்று நீ
மணி மேகலைக் குரைத்த மாண்பதனை எண்ணி நிதம்
பணி வோடுவந்துன்றன் பாதம் பணிகின்றோம்
துணிவதனைத் தாருமம்மா துன்பம் பொறுத்திடவே!

அயில் வேலெடுத்தவுணர் அனைவரையு மழித்த நல்ல
மயில் வீரன் தனையீன்ற மாதாவே, மனோன் மணியே!
நயினா தீவென்றவுடன் நாகம்மா உன் நினைவோ
டயராதுனைத் தொழுதோம், அறியாமை போக்கிடு
வாய்!

மதிவாணர்

### வரம் அருள் வாயே!

வடிவாம் பிகையே! நயினையம்மா!
வரமதை வாரி வழங்கம்மா!
வன்னியிலுள்ள - உன்பக்தர்கள்
வரவேண்டும் தரைவழிப் பாதை ஊடே!
வந்து உந்தன் பாதார விந்தங்களை
வணங்க வேண்டும்
வணங்கி உந்தன் - அன்பை
வருட வேண்டும்
வரம் அருள்வாயே!

கரவையூரான்

### காத்தருள்வாய் அம்மா

ஆர்ப்பரிக்கும் அலைகடலின் ஓசையுடன்
நர்த்தனமாடும் உன் கொலுசின்
ஓசை சேர்ந்து ஒலிக்க .........
நாகத்தின் மீதமர்ந்து நயினையிலே
அமைதியுடன் அரசாட்சி நடத்தும்
எங்கள் அகிலாண்டேஸ்வரியே தாயே!
நகரிழந்து நலமிழந்து நிற்கும் நம்மை
நினதருளால் காத்திடுவாய் அம்மா;

சா. அஜீந்தன்

### சோபிக்க அருளுமம்மா!

நயினையின் நாயகியே நர்த்தன ஈஸ்வரியே
நற்கருணையளித்திடும் நாகேஸ்வரியே
நாள் தோறும் உன்னருள் காணத் தேவியே
நலங்கள் பல செய்திடுவாய் அம்பிகையே தாயே!

நாகத்தில் அமர்ந்திருந்து நல்லருள் நல்கும் தாயே
நாளெல்லாம் தேடிவரும் நல்லவரைக் காத்திடம்மா
சோதி வடிவானவளே துரந்தரியே தாயே
சோதனையின்றி எமை சோபிக்க அருளுமம்மா!

நீர்வையூர் - வெ. சுதர்சினி

## துடுப்பாட்டம்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் மத்திய சன சமூக நிலைய விளையாட்டுக்கழகத்தால் நாளைநடாத்தப்படவுள்ள ஆறுமுகம் கமலநாதன் ஞாபகார்த்த துடுப்பாட்ட சுற்றுப் போட்டிக்கான தெரிவுப் போட்டிகள் யாவும் இன்று நடைபெறவுள்ளன. (உ)

## கதிரைகள் வழங்கப்பட்டன

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறைப் பிரதேச சபையினால், காரைநகர் மத்தி கங்கைமதி சனசமூக நிலையத்திற்கு 40 இரும்புக் கதிரைகள் வழங்கப்பட்டுள்ளன; (உ-75)

## வேம்படி மாணவிக்கு 2தங்கப்பதக்கங்கள்

(நல்லூர்)

யாழ். வேம்படி மகளிர் கல்லூரியின் தரம் 6 மாணவி செல்வி தெ. பவனுஜா, அண்மையில் நடைபெற்ற இரு பண்ணிசைப் போட்டிகளில் வெற்றி பெற்று இரண்டு தங்கப்பதக்கங்களைப் பெற்றுள்ளார்.

இணுவில் திருநெறிய தமிழ் மறைக்கழகப் பண்ணிசைப் போட்டியின் கீழ்ப்பிரிவிலும், வண்ணை நீராவியடி கிராம அபிவிருத்திச் சங்கப் பண்ணிசைப் போட்டியில் மத்திய பிரிவிலும் அவர் தோற்றியே மேற்படி தங்கப்பதக்கங்களைப் பெற்றுள்ளார்; உ103

## க. பொ. த. உயர்தர மாணவர்க்கான

# உயிரியல்

## பாட வினாக்கள் -19

ஆசிரியர்: கே. சுகந்தன் B. Sc.

### பல்தேர்வு வினாக்கள்

1. உயர் தாவரங்களில் சேமிப்பு பல்சக்கரைட்டுக்களாகக் காணப்படக் கூடிய சேர்வை பின்வருவன வற்றுள் எது?
1) சுக்குரோசு 2) பெக்ரின் 3) செலுலோஸ்
4) கிளைக்கோசன் 5) மாப்பொருள்

2. அதிகுன றந்தளவுக்கு வியத்தமடைந்தது எனக்கருதப்படக் கூடியது
1) புடைக்கல விழையம் 2) ஒட்டுக்கலவிழையம்
3) துணைக்கலங்கள 4) வல்லுருக்கலவிழையம் 5) கலன்கள்

3 அங்கிகளின் பெயரீடு, பாகுபாடு சம்பந்தமாகச் சரியான கூற்று எது?
1) எல்லா இனங்களினதும் விஞ்ஞான ரீதியிலான பெயர்ஆங்கிலத்திலேயேகொடுக்கப் பட்டுள்ளது;
2) ஒரு அங்கியின் விஞ்ஞான ரீதியிலான பெயர் அதனது சாதியையும் இனத்திற்குரிய வேறுபடுத்தியையும் கொண்டிருக்கும்
3) இரு சொற்பெயரீட்டு முறையை RobertHooke என்பவரே அறிமுகப்படுத்தினார்
4) உலகத்தில் உள்ள தாவரங்களின் இனங்கள்யாவும் தற்போது பெயரிடப்பட்டு விட்டன
5) Whittaker's பாகுபாடு அங்கிகள் யாவற்றையும் மூன்று இராச்சியங்களாக வகுக்கின்றது

4. எல்லா வற்றிலும் பார்க்க நீடித்து நிற்கக் கூடிய இருகருக் கூட்டு அவத்தையைக் கொண்டது பின்வரும் சாதிகளுள் எது?
1) Phytophthora 2) Mucor 3) Penicillium
4) Pleurina 5) Agaricus

5 Nephrolepis தொடர்பாகத் தவறான கூற்று எது?
1) வித்திக்கலன்கள் குவையில் தோன்றும்
2) புறவணி காணப்படும்
3) வித்திகள் இழையுருப் பிரிவால் தோன்றும்
4) அது ஒத்த வித்தியுள்ளது
5) புணரிகள் பல சவுக்கு முளைகளைக் கொண்டவை

6. Cycas இல் கருக்கட்டலின் போது ஆண்புணரிகள் மகரந்தக குழாயிலிருந்து விடுவிக்கப்படுவது?
1) மகரந்த அறையினுள் 2) ஆதிச்சனனியின்உதரத்துள்
3) ஆதிச்சனனியின்அறையினுள் 4) நேரடியாக முட்டையுள்
5) நுண் துவாரத்தின் நுனியுள்

7. ஆட்சியுள்ள இரு மடியச் சந்ததியைக் கொண்டதும்சவுக்கு முளையுள்ள புணரிகளைத் தோற்றுவிக்காததும் பின்வருவன வற்றுள் எது?
1) Selaginella 2) Pogonatum 3) Cycas
4) Anthophyta 5) Ulva

8. கலன் தாவரங்களின் பிரிவுகள் யாவற்றிக்கும் பொதுவல்லாதது எது?
1 வித்துத்தோற்றம் 2, சந்ததிப்பரிவிருத்தி 3) இருமடியச் சந்ததியின்ஆட்சி4) உரியமும்காழும்காணப்படல்5)இலிக்னின் காணப்படல்

9. ஒரு பூக்குந்தாவரத்தின் நுகத்திலிருந்து விருத்தியடையாதது எது?
1) வித்திலை 2) முளை வேர் 3) முளைத்தண்டு
4) வித்தக விழையம் 5) வித்திலைக் கீழ்த்தண்டு

10. தாவரங்களின் பூச்சியுண்ணுவதற்குரிய இசைவாக்கங்களால் குறை நிரப்பப்படுகின்ற கனிப்போசணைப் பொருள் எது?
1) K 2) N 3) Ca 4) Fe 5) P

11. பெண்களிலே கருப்ப நிலையின் போது மஞ்சட்சடலத்தைப் பேணுவதுடன் சம்பந்தப்பட்ட ஓமோன்.
1) ஈஸ்ரொஜின் 2) ஒக்சிரோசின்
3) புரொசெசுத்திரோன் 4) HCG 5) புரோலக்ரின்

12. பின்வருவனவற்றில் ஏது மனிதனின் சுவாசத் தொகுதியின் ஒரு தொழில் அன்று?
1] ஒலி உற்பத்தி 2] மணநுகர்ச்சி
3] குருதி pH இன் சீராக்கல்
4] உட்சுவாச வளியைக்குளிராக்கல் 5] கழித்தல்;

13. மனிதனிலே பளிங்குக் கசியிழையம் இருப்பது.
1) முளளந்தண்டிடை வட்டத்தட்டுகளில்
2) வாதநாளியில் 3) வெளிச்செவியில்
4) மூச்சுக்குழல்வாய் மூடியில் 5] இணையங்களில்

14. மானிட உடலில் தனிச் செதில் மேலணி இருப்பது.
1) களத்தில் 2) சிறுநீர்ப்பையில் 3) வாதநாளியில்
4) பேடயப் போலிச் சுரப்பியில்
5) போமனின் உறையில்

15. மானிடச் செவியில் சமநிலையைப் பேணுவதுடன் சம்பந்தப்பட்ட வாங்கிகளைக் கொண்டுள்ள ஒரு கட்டமைப்பு.
1) சிறுபை 2) செவிக்கால்வாய் 3) வட்டப்பலகணி
4) அடிமென்சவ்வு 5) செவிநரம்பு

# விடைகள்

### வினா இல - 12 (தொடர்ச்சி)

#### வினா - 03

J) **திரவ வளர்ப்பு எனின்**

- மாதிரியின் ஓர் துளியானது கிருமி நீக்கம் செய்யப்பட்ட கிருமி புகுத்தும் தடம் மூலம் எடுக்கப்பட்டு சுத்தமான வழுக்கியின் மத்தியில் இடப்பட்டு மெல்லிய படலமாக்கப் படும்.
- பின்பு வழுக்கியானது காற்றில் உலர விடப்படும்.
- பின்பு இவ் வழுக்கியை bunsen சுவாலையின் ஊடாக ஒருசில தடவை கொண்டு செல்வதன் மூலம் வெப்பப்பதித்தல் மேற் கொள்ளப்படும்.
- பின்னர் methylene blue சாயத்தை மாதிரியின் மீது இட்டு 5 நிமிடம் வைத்திருக்கப் படும்;
- பின்பு மெதுவாக ஓடும் நீரினால் கழுவி மேலதிக சாயம் அகற்றப்பட்டதும் வழுக்கி உலர விடப்பட்டு நுணுக்குக் காட்டி யூடாக அவதானிக்கப்படும்;

**திண்ம வளர்ப்பு எனின்**

- சுத்தமான வழுக்கியின் மத்தியில் ஓர் துளி கிருமி நீக்கம் செய்த நீரானது கிருமிநீக்கம் செய்த கிருமி புகுத்தும் தடம் மூலம் இடப்படும்.
- பின்பு திண்ம வளர்ப்பின் மிகச் சிறிதளவு தடத்தின் உதவி கொண்டு எடுக்கப்பட்டு நீர்த் துளியில் ஐதாக்கி மெல்லிய படலமாக்கப்படும்.
- பின்னர் வழுக்கியை வளியில் உலர்த்தி, வெப்பப் பதித்தல் மேற்கொண்டு சாயமேற்றி நுணுக்குக் காட்டியூடாக அவதானிக்கப்படும்.

K) தோற்றத்தில் அல்லது நிறத்தில் மாற்றம் ஏற்படல்;

- சுவை, மணத்தில் மாற்றம் ஏற்படல்;
- வழுவழுப்புத்தன்மை ஏற்படல்;
- போசணைப் பெறுமானம் குறைதல்.
- நச்சுப் பொருட்கள், அமிலம், அற்ககோல் உருவாதல்;
- நோய் விளைவிக்கும் அங்கிகள் திரட்டப்படல்.
- இரசாயன மாற்றம் ஏற்படல்.

### வினா இல- 14 (தொடர்ச்சி)

#### வினா - 3

a) தாவரமொன்றின் தனியாக்கப்பட்ட கலங்கள் அல்லது சிறிய இழையத் துண்டுகள் விசேட வளர்ப்புக் கரைசலில் வளர்க்கப்படல்;

b)
- இங்கு பயன்படுத்தப்படும் வளர்ப்பூடகம் சரியான விகித அளவில் போசணைப்பதார்த்தங்களையும் தாவர வளர்ச்சியைத் தூண்டும் ஓமோன்களையும் கொண்டிருக்க வேண்டும்.
- இவ்வளர்ப்பூடகத்தில் N Mg. Fe, K போன்ற அசேதன அயன்களும் சக்தியைவழங்கும் மூலமாக சுக்குரோசும் விற்றமின்களும் இருக்க வேண்டும்.
- இங்கு பயன்படுத்தப்படும் auxin ஓமோன் வேர் வளர்ச்சியையும்கல நீட்சியையும் தூண்டும் CytoKinin ஓமோன் அங்குர வளர்ச்சியையும் கலப் பிரிவையும் தூண்டும்;
- இழையவளர்ப்பு கிருமி நீக்கம் செய்யப்பட்ட விசேட வளர்ப்பு அறைகளில் பெற்றிக்கிண்ணங்களில் மேற்கொள்ளப்படும்;
- இழைய வளர்ப்புக்கென ஒட்டுக் கட்டைத் தாவரத்தில் இருந்து (Stock plant) பெறப்படும் சிறிய இழையத் துண்டுகள் explants எனப்படும்.
- Explants யாவும் bleach கரைசலில் மேற்பரப்பு கிருமி நீக்கம் செய்த பின்பே வளர்பூடகத்தில் வளர்க்கப்படும்.
- இழைய வளர்ப்பில் பயன்படுத்தப்படும் சகல உபகரணங்களும் கிருமி அழிக்கப்பட்ட நிலையிலே பயன்படுத்தப்படுவதால் நுண்ணங்கித் தொற்றைத் தவிர்க்கலாம்.
- இழைய வளர்ப்பு மேற்கொள்ளப்படும் விசேட வளர்ப்பு அறையில்தாவர விருத்தியைத் தூண்டக் கூடியதாக கட்டுப்படுத்தப்பட்ட நிபந்தனைகள் பேணப்படும் அவையாவன வெப்பநிலை, ஒளிச்செறிவு, ஒளியின் வகை, பகல்கால அளவு, ஈரப்பதன் போன்றன வாகும்.

C) **அனுகூலங்கள்**

- தாவரங்களை குறுகிய காலத்தில் இனப்பெருக்கிக் கொள்ளலாம்;
- பிறப்புரிமையியலில் ஒத்த தாவரங்களை உற்பத்தி செய்யலாம்;
- குறுகிய இடத்திலே அதிகளவு தாவரங்களை இனவிருத்தி செய்யலாம்;
- குறிப்பிட்ட காலங்களில் காலநிலை மாற்றங்களால் அழியும் தாவரங்களை இழைய வளர்ப்பால் பெருக்கிக் கூடிய விலைக்கு விற்கலாம்.
- மலடான தாவரங்களை இம்முறை மூலம்இனப் பெருக்கம் செய்யலாம்;
- வித்து முளைப்பதற்குப் போதுமானளவு சேமிப்புணவைக் கொண்டிராத Orchid வித்துக்களை இழைய வளர்ப்பு மூலம் முளைக்கச்செய்து பெருக்கலாம்.
- பிறப்புரிமைப் பொறியியலில் உற்பத்தியாக்கப்பட்ட transgenicPlant இனை வளர்க்க இழைய வளர்ப்பு பயன்படும்;
- ஒரே மாதிரியான பல தாவரங்களை உற்பத்திசெய்து விற்பனை செய்யலாம்;
- இழைய வளர்ப்பின் போது தாவரங்கள் சிறிய பருமனாக இருக்கும் போதே விமானங்களில் கொண்டு சென்று உலகநாடுகளில் விற்பனை செய்யலாம்;

**பிரதிகூலங்கள்**

- பயிற்றுவிக்கப்பட்ட வேலையாட்கள் அதிகம் தேவை;
- செலவு அதிகம்;
- பொருளாதார முக்கியத்துவமான தாவரங்களையே இம்முறை மூலம் இனம்பெருக்கி கொள்ளலாம்.
- இந்த பெறப்படும் தாவரங்கள் யாவும் பிறப்புரிமையியலில் ஒத்தவையாகஇருப்பதால் இலகுவில் நோய்த் தாக்கத்திற்குட்படும்;

d) தனியன்கள் சேர்ந்து வாழும் வாழ்க்கை முறை.

e) ஓரினஈட்டம்:- இங்கு ஓரினத்தனியன்களுக்கிடையில் தொடர்பு காணப்படும்;
உதாரணம்:- மந்தைக்கூட்டம், எறும்புக்கூட்டம், தேனீ, கறையான்.

- பல்லின ஈட்டம்:- இரு வேறுபட்ட இனங்கள் சேர்ந்து வாழும் வாழ்க்கை முறை, இதில் பலவகைகள் உண்டு.

1) ஒரட்டில் உண்ணல்:- கடல் அணிமணி + முனிவன் நண்டு;
2) ஒட்டுண்ணிகள்:- மனிதன்+ Plasmodium Vivax
3) ஒன்றிய வாழ்விகள்:- அவரைக் குடும்பத்தாவரவேர் + Rhizobium

f) **ஒட்டுண்ணி** :- ஒரு அங்கியின் உடலின்மேற்பரப்பில் அல்லது உடலின் உள்ளே வாழ்ந்து கொண்டு போசணையைப் பெறுவதுடன் அந்தஅங்கிக்குத் தீமையை ஏற்படுத்தும் ஈட்டமாக வாழும் அங்கிகள்.

**விருந்துவழங்கி**:- ஒட்டுண்ணிக்கு உணவையும் வாழிடத்தையும் வழங்கும் அங்கி,

**காவி**:- ஒரு முதல் விருந்துவழங்கியில் இருந்து பிறிதொரு விருந்து வழங்கிக்கு ஒட்டுண்ணியின் விருத்திப் பருவத்தை நேரடியாகக் கடத்தும் இடைவிருந்து வழங்கி.

**தொற்றும் பருவம்**:- தொற்றுதலை நிகழ்த்தி முதல் விருந்து வழங்கியில் தொடர்ந்து விருத்தியடையக் கூடிய ஒட்டுண்ணியின் விருத்திப்பருவம்.

**நோயரும்பு காலம்**:- ஒரு ஒட்டுண்ணியின் தொற்றும் பருவம் தொற்றுதலுக்கும் நோய் அறிகுறிகள் முதலில் தோன்றுவதற்கும் இடைப்பட்ட காலம்;

g **ஒட்டுண்ணியின் வகைகள் இரண்டுகாணப்படும்.**

1) புறஒட்டுண்ணி:-இதில் நிரந்தரப் புற ஒட்டுண்ணி (பேன்,உண்ணி)தற்காலிகப் புற ஒட்டுண்ணி (நுளம்பு, Leeth) என இரு பிரிவுகள் காணப்படும்.
2) அக ஒட்டுண்ணி ;-இதில் கலத்தக ஒட்டுண்ணி [Plasmodium]கலப்புற ஒட்டுண்ணி (Entamoeba, Ascaries Wuchereria) எனஇருபிரிவுகள் உண்டு;

**காவியின் வகைகள் இரண்டு காணப்படும்:**

1) பொறிமுறைக்காவி:-தான் எடுத்துச் செல்லும் ஒட்டுண்ணிப் பருவங்களை தன் உடலில் மாற்றம் எதற்கும் உட்படுத்தாது அப்படியே விருந்து வழங்கியின் உடலினுள் செலுத்தும்காவி;
உதாரணம்:-வீட்டு ஈ
2) உயிரியல் காவி;-தான் எடுத்துச் செல்லும் ஒட்டுண்ணியின் பருவங்களை தன்னுள் மாற்றத்திற்கு இடமளித்து வேறு ஒரு நிலையில் கடத்தும் காவி;
உதாரணம்:- Anopheles

h) 1) Plasmodium vivax 2) Entamoeba histolytica
3) Necator americanus 4) Wuchererereria bancrofti
5) Ascaris lumbricoides

(அடுத்த சனி தொடரும்;)

## இன்று ஒரு தகவல்

# சிந்தித்துச் செயற்படு!

ஓர் ஊரில் ஒருவன் புதிதாக மீன் கடை வைத்தான்! தான் கடை வைத்திருப்பது எல்லோருக்கும் தெரியவேண்டும் என்பதற்காகப் பலகை ஒன்றில் மிக அழகாக மீன் படம் வரைந்து அதன் கீழே ''நல்ல மீன் இங்கே விற்கப்படும்'' என்றுஎழுதிக்கடைக்கு வெளியே வைத்திருந்தான். சிறிது நேரத்தில் அவன் நண்பன் ஒருவன் அங்கேவந்தான். பலகையைப் பார்த்தான். பிறகு அவனைப் பார்த்து '' நீ வேறெங்காவது கடை வைத்திருக்கிறாயா?'' என்று கேட்டான். இல்லையே என்றான் அவன்.

''அப்படியானால், தேவையில்லாமல் பலகையில் ஏன் ''இங்கே, என்ற சொல் உள்ளது? அதைஅழித்துவிடு'' என்றான். நண்பனின் கருத்தைஏற்றுக்கொண்டான் அவன் இப்பொழுது பலகையில் மீன் படத்துடன் ''நல்ல மீன் விற்கப்படும்'' என்று இருந்தது. அங்கு வந்த மற்றொருவன் பலகையைப் பார்த்தான். பிறகு அவனைப் பார்த்து, ''நீ கெட்டுப்போன மீனை எப்போதும் விற்பது இல்லையே! எதற்காகதேவையில்லாமல் ''நல்ல'' என்ற சொல். அதை அழித்து விடு என்றான். இப்பொழுது 'மீன் படமும், கீழே மீன் விற்கப்படும்' என்ற தொடரும் இருந்தது.

அடுத்து வந்த வேறொருவன் ''மீன் என்று எழுதி இருக்கும் போது மேலே எதற்கு ''மீன்படம்'' என்று கேட்டான், பலகையில் இப்போது ''மீன் விற்கப்படும்'' என்று மட்டுமேயிருந்தது; நான்காவதாக வந்தவன், ''மீனை யாருக்கும் இனாமாகக் கொடுப்பதில்லையே. எதற்காக ''விற்கப்படும்'' என்ற சொல் என்று கேட்டான். இப்பொழுது பலகையில்வெறும் மீன் என்ற சொல் மட்டுமேயிருந்தது. அடுத்து வந்தவன், ''தூரத்திலிருந்து வரும்பொழுதே மீன் நாற்றம் மூக்கைத் துளைக்கிறதே; பின்பு ஏன் ''மீன்'' என்று எழுதியிருக்கிறாய்?'' என்று கேட்டான்.

கடையின்முன் இப்பொழுது வெறும் பலகை மட்டும் தான் இருந்தது. அங்கே வந்த இன்னொருவன், என்ன கடைக்கு முன்னே வெறும் பலகையைவைத்திருக்கிறாய்? இதில் ஒருமீன் படம்வரைந்து கீழே ''நல்ல மீன் இங்கே விற்கப்படும்'' என்று எழுதினால், எவ்வளவு நன்றாகவும், வாணிபத்திற்குப் பயனாகவும் இருக்கும்'' என்று சொன்னான்;

பேராசிரியர் எ. சோதி

# யாழ்ப்பாணப் பொதுசன நூலகம்

# நவீன மயப்படுத்தப்பட வேண்டும்

## பிரி. தூதுவரிடம்விளக்கமாக எடுத்துரைப்பு

(யாழ்ப்பாணம்)

தெற்காசியாவிலேயே பழமை வாய்ந்ததும், தற்போது புனரமைக்கப்பட்டு வருவதுமான யாழ். பொதுசன நூலகத்திற்கு கணனி வசதிகளையும், இணையத்தளத்தையும் ஏற்படுத்தித்தர வேண்டும்.

யாழ்ப்பாணத்துக்கான இரு நாள் விஜயத்தை மேற்கொண்டபிரித்தானியத்தூதுவர் லிண்டாஜோய்டபீல்ட் தற்காலிக யாழ் பொதுசன நூலகத்திற்கு நேற்று முன் தினம்சென்றுபிரித்தானியஅரசினால் அன்பளிப்புச்செய்யப்பட்டபழைமை வாய்ந்த நூல்களை வைபவ ரீதியாக கையளித்தார்.

அவ்வேளை யாழ்; மாநகர சபையினர்மேற்கண்டகோரிக்கையை விடுத்தனர்;

நூலகம் மீண்டும் புதுப்பொலிவு பெற வேண்டுமானால் அதனைக் கணனி மயப்படுத்த 35 இலட்ச ரூபா நிதி தேவை எனவும், நூலக நடமாடும் சேவையினை மேற்கொள்ள வசதியாக வாகன வசதி மற்றும் 20 கணனிகளுக்கானதேவைப்பாடுகுறித்தும் இவரிடம் விரிவாக எடுத்துக் கூறப்பட்டது.

இவற்றைச் செவிமடுத்த லிண்டாடபீல்ட் தனதுஉரையில், இது விடயம் தொடர்பாக உயர் அதிகாரிகளுடன் தொடர்புகொண்டு கூடிய விரைவில் நல்ல முடிவினை அறிவிப்பதாகவும்,

யாழ்ப்பாண மணிக்கூட்டுக் கோபுரத்திற்கு பிரித்தானிய இளவரசரால் மணிக் கூடு அன்பளிப்புச் செய்யப்பட்டு வருடங்கள் சில கழிந்த நிலையிலும், மணிக்கூட்டுக்கோபுர திருத்த வேலைகள் முடிவடைந்து, அது பொருத்தப்படாமைக்கு போர் நடவடிக்கைகளேகாரணம் என்பதைத் தான் உணர்வதாகவும் குறிப்பிட்டார்.

இந் நிகழ்வில், பிரித்தானியப் பாதுகாப்புத் தூதுவர் அலுவலக அதிகாரி ஹெலோன்மற்றும்யாழ் மாநகரசபைப்பிரதி மேயர் கந்தையன், பதில் ஆணையாளர் வே. குலநாயகம், மேலதிக அரச அதிபர் து. வைத்திலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர். (உ-10)

## கைகலப்பில் காயம்

(மந்திகை)

உறவினர்களுடன் ஏற்பட்ட கைகலப்பில் காயமடைந்தவர் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்;

கடந்த செவ்வாயன்று இராஜகிராமம் பகுதியில் நடைபெற்ற சம்பவத்தில் விஸ்வலிங்கம் சந்திரலிங்கம் (வயது- 23) என்பவரே காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்; (உ-23)

## குண்டு வீச்சில் சேதமான இன்பருட்டி ச.ச. நிலையம் புதிய கட்டடத்தில்

(புலோலி)

1995 ஆம் ஆண்டு விமானக் குண்டு வீச்சினால் சேதமடைந்த இன்பருட்டி சன சமூக நிலையத்திற்கு கடற்றொழில் நீரியல்வள அமைச்சின் அனுசரணையுடன் மூன்றரை இலட்சம் ரூபா செலவில் புதிய கட்டடமொன்று நிர்மாணிக்கப்பட்டுள்ளது;

இச் சனசமூக நிலையப் புதிய கட்டட நிர்மாணத்திற்கு கடற்றொழில் நீரியல் வள அமைச்சு ஒரு இலட்சத்து 40 ஆயிரம் ரூபாவையும்,

வெளிநாடுகளில் உள்ள இன்பருட்டி கிராம நலன் விரும்பிகள் 2 இலட்சத்து 10 ஆயிரம் ரூபாவையும் அன்பளிப்புச் செய்துள்ளனர்;

இச் சனசமூக நிலையத்தின் புதிய கட்டடம் வெகு விரைவில் திறந்து வைக்கப்படவுள்ளதாக சனசமூக நிலையத் தலைவர் கே. குருசாமி தெரிவித்தார்; (உ-25)

## பண்ணிசைப் போட்டி

(நல்லூர்)

கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலய மண்டபத்தில், இம்மாதம் 24, ஆம் திகதி காலை 9 மணிக்கு, கோண்டாவில் வடக்குஸ்ரீஞானவைரவர் ஆலய அலங்கார உற்சவத்தை முன்னிட்டு, பண்ணிசைப் போட்டி நடத்தப்படவுள்ளது; கீழ்ப்பிரிவு, மத்திய பிரிவு, மேற்பிரிவு என மூன்று பிரிவுகளாக இப்பண்ணிசைப் போட்டி நடைபெறும். (செ-103)

## பெண் பத்திரிகையாளர் பயிற்சி இன்று ஆரம்பம்

(தென்மராட்சி)

யாழ்ப்பாண மாவட்டக் கூட்டுறவுச்சபையின்மாவட்ட மகளிர் குழு நடாத்தும் இளம் பெண் பத்திரிகையாளர் பயிற்சி நெறி இன்று வீரசிங்கம் மண்டபத்தில் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது;

இப்பயிற்சி நெறியை யாழ்; மாவட்ட மேலதிக அரச அதிபர் து. வைத்திலிங்கம் சம்பிரதாய பூர்வமாக ஆரம்பிததுவைக்கயாழ்; பல்கலைக்கழகத்தின் நுண்கலைப் பீடத் தலைவர் கலாநிதி சபா. ஜெபராசா ஆரம்பவுரையை நிகழ்த்துவார்.

இப் பயிற்சி நெறியில் 35 பயிற்சியாளர்கள் பங்குபற்றவுள்ளனர்;

என மாவட்டமகளிர் குழுத் தலைவி திருமதி ரதி சோதிலிங்கம் தெரிவித்தார்; (உ-77)

## 'ஊதாரி மைந்தன்' திருமலை செல்கிறது

(யாழ்ப்பாணம்)

தமிழ்மொழித் தினப் போட்டியில் மாவட்ட மட்டத்தில் முதலிடத்தைப் பெற்றமெலிஞ்சிமுனை றோ; க.த.க வித்தியாலய விசேட கூத்தான 'ஊதாரி மைந்தன், மாகாண மட்டப்போட்டியில் பங்குகொள்வதற்குதெரிவாகி திருமலை செல்லவுள்ளது:

46 தீவக வலயப் பாடசாலைகள் பங்குபற்றியமாவட்ட மட்டப் போட்டியில் மெலிஞ்சிமுனை றோ;க.த.க பாடசாலையின் மேற்படி கூத்து மாகாண மட்டப் போட்டிக்குத் தெரிவாகியமை குறிப்பிடத்தக்கது; [உ]

## மாநகரசபை மேயர் சங்கம் ஆட்சேபம்

(கொழும்பு)

ஐ. தே. க. வின் கட்டுப்பாட்டிலுள்ள கொழும்பு மாநகரசபையின் பல பணிகளை பொறுப்பேற்பது என்ற அமைச்சர் மங்கள சமரவீரவின் பிடிவாதமான போக்குப் பற்றி மேயர் சங்கம் ஜனாதிபதிக்கு தமது ஆட்சேபத்தைத் தெரிவித்துள்ளது.

ஜனாதிபதியுடன் பேசுவதற்கு ஒருசந்தர்ப்பத்தை வழங்குமாறும் 14 மேயர்களின் இச்சங்கம்கோரியுள்ளது. ஆனால் உரையாடலுக்கான நேரம் இன்னும் ஒதுக்கப்படவில்லை என்று பொ. ஐ. முன்னணி சார்புமேயர் ஜயரத்ன பெரேரா தெரிவித்துள்ளார்;

இதே போக்கில் அதிகாரங்கள் பிடுங்கப்படுவது தொடருமானால் படிப்படியாக, சகல மாநகரசபைகளினதும் அதிகாரங்கள் பறிக்கப்பட்டு விடலாம் என்றஅச்சம் மேயர்கள் மத்தியில் நிலவுகின்றமை குறிப்பிடத்தக்கது. (உ)

## மூவர் நியமனம்

[மந்திகை]

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலைக்கு புதிதாகதொலைபேசி இயக்குநர்களாக மூவர் நியமனம் பெற்றுள்ளனர்.

சாவகச்சேரி வைத்தியசாலையில் கடமையாற்றிய கே: பரலோகராஜா, சுகாதார சேவைகள் பிரதி மாகாண சுகாதார பணிப்பாளர் அலுவலகத்திலிருந்து தில்லைநாதன், கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலிருந்து அருந்தவகுமார் ஆகியோர் தொலைபேசி இயக்குநர்களாக இங்கு நியமனம் செய்யப்பட்டுள்ளனர். [உ-23]

## இல. தமிழர் ஆசிரியர் சங்க ஏற்பாட்டில் கருத்தரங்கு இரு தினங்கள்

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம், சர்வதேச கல்வியகம், பிரடறிக் ஈபேட் மன்றம் ஆகியன இணைந்து இலங்கையில்சமுதாயத்தில் ''பெண்களுக்கு சமவாய்ப்பு'' என்னும் தலைப்பில் கருத்தரங்கினை நடாத்தவுள்ளன.

இன்றும், நாளையும், யா வேம்படி மகளிர் கல்லூரியில் காலை 9 00 மணிமுதல் பி:ப 4.00 மணி வரை இக கருத்தரங்கு நடை பெறவுள்ளது.

இலங்கைத் தமிழர் ஆசிரிய சங்கத்தின் யாழ் மாவட்டத்தில் உள்ள சகல கிளைகளினதும் தலைவர், செயலாளர், பொருளாளர் மற்றும் இரண்டு பெண் பிரதிநிதிகளும் சகல தாய்ச் சங்க நிர்வாகிகளும், மாவட்ட நிர்வாகிகளும், இந் நிகழ்வில் கலந்து கொள்வர்.

இக் கருத்தரங்கில் கலந்து கொள்வோருக்கு போக்குவரத்துப்படி எழுது கருவிகள், உணவு ஆகியன வழங்கப்படும் என சங்கத்தின் பொதுச் செயலாளர் த. மகாசிவம் தெரிவித்துள்ளார். (உ)

## பாடப் புத்தகங்கள் பற்றிய விபரங்கள் சேகரிப்பு

யாழ். வலயப் பாடசாலைகளுக்கு, 2002 ஆம் ஆண்டுககுத்தேவைப்படும்இலவசப் பாட நூல்கள் பற்றிய விபரங்களை கோட்டக்கல்வி அலுவலகங்கள் ஊடாக வலயப் பணிமனை கோரியுள்ளது;

பாடசாலையில் கல்விகற்கும் மாணாக்கரது எண்ணிக்கை வகுப்புகள், பாடப்புத்தகங்கள பற்றிய விபரங்களை அதிபர்கள் அவ்வப் பகுதி கோட்டக்கல்வி அலுவலகங்களில் விரைவாகச் சமர்ப்பிக்கும்படி அறிவுறுத்தப்பட்டுள்ளது. (உ-6)

## பொதுச் சபைக் கூட்டம்

(நல்லூர்)

கந்தர்மடம் ஆத்திசூடி வீதி ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய விசேட பொதுச் சபைக் கூட்டம் நாளை மு:ப 10. 30மணிக்கு ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. வருடாந்த அறிக்கை, கணக்கறிக்கை சமர்ப்பித்தல், யாப்பு விதிகள் ஏற்றுக் கொள்ளல் என்பன மேற்படி கூட்டத்தில் இடம்பெறவுள்ளன; (செ-103)

## சமூக அபிவிருத்திக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

வலி தெற்கு சனசமூகநிலையங்களின் சமாசம் நடாத்தும் சமூக அபிவிருத்திக் கருத்தரங்கு நாளை காலை 9.00 மணிக்கு மருதனார்மடம் யூனியன் கல்லூரியில் நடைபெறவுள்ளது;

வலி. தெற்கு சனசமூக நிலையங்களின் சமாசத்தலைவர் இ; அரிகரன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில்,

'சனசமூக நிலையங்களின்' முகாமைத்துவம் என்றபொருளில் யாழ். பல்கலைக்கழக வணிகத்துறைத் தலைவர் க. தேவராஜாவும்,

வைத்திய அதிகாரி இ: சிவசங்கர் 'உளவியலும்உளவியல் சம்பந்தமானகலந்துரையாடலும்' என்ற பொருளிலும் கருத்துரையாற்றவுள்ளனர்; (உ)

## கல்வயல் சென்ற கள்வர் மாட்டிக் கொண்டனர்

(தென்மராட்சி)

தென்மராட்சிப் பிரதேசத்தில் மீளக்குடியமர இன்னும் அனுமதிக்கப்படாத கல்வயல் கிராம அலுவலர் பிரிவுக்குள் அத்துமீறிப் பிரவேசித்த சுமார் 6 பேர் பாதுகாப்புப்படையினரால் கடந்த புதன் சுற்றிவளைத்துப் பிடிக்கப்பட்டதாக தெரியவருகிறது;

இவ்விதம் பிடிககப்பட்டவர்கள் திருடர்கள் எனத் தெரியவந்துள்ளது.

இவர்கள் பாதுகாப்புப் படையினரால் கடுமையாக எச்சரிக்கை செய்யப்பட்டு சில மணிநேரத்தின் பின்னர் விடுவிக்கப்பட்டனர் என அறியப்படுகின்றது. (உ-77)

# வியக்க வைக்கும் விந்தை நிகழ்வுகள்

★ தாயைப் போல......

''தாயைப் போல பிள்ளை நூலைப்போல சேலை'' என்று தமிழில் ஒரு பழமொழி உள்ளது.

ஆனால் இதில உண்மை இருக்கிறது என விஞ்ஞானிகள் ''சயன்ஸ் டைஜஸ்டில்'' தெரிவித்துள்ளார்கள். அவர்களின் ஆராய்ச்சி முடிவின்படி தாயின் நடத்தையில் தான் குழந்தையின் குணங்கள் தீர்மானிக்கப் படுகின்றதாம். தாய் உணர்ச்சி வசப்படும் பேர்வழி என்றால் குழந்தையும் நிச்சயமாக அவ்வாறே அமையுமாம். ஒரு குழந்தை குற்றவாளியாக மாறுகிறதென்றால் அதற்கு தாயின் உணர்ச்சி வசப்படும் குணமே காரணம் என்று கூறப்பட்டுள்ளது.

அப்படி என்றால் இனி எல்லாப் பழியும் அம்மாக்கள் மீது தான்!

★ அறிவுரை கூறும் அழகிய பெட்டிகள்

புகைப்பவர்களை திருத்துவதற்கு சிகரெட் பெட்டிகள் அறிவுரை சொல்கின்றதென்றால் ஆச்சரியமாக இல்லையா?

ஆம்! கொஞ்சு மொழியில் புகைத்தலால் உடலுக்கு ஏற்படக் கூடிய தீங்குகள குறித்து அறிவுரை சொல்லும் பேசும் சிகரெட் பெட்டிகளை பிரிட்டன் தொழில் நுட்பக் கம்பனி தயாரித்துள்ளது.

சிகரெட் எடுப்பதற்கு பெட்டியைத் திறந்தால் போதும் இவை அறிவுரை கூறத் தொடங்கி விடுமாம் மனைவிமார் திருத்த முடியாத எத்தனையோ புகைக்கும் கணவன்மாரை இப்பேசும் பெட்டிகள் திருத்தி உள்ளன வென்றால் பாருங்களேன்....

அவதானி

# சர்வாதிகாரி முஷாரப்பை உலக நாடுகள் தட்டிக் கேட்க வேண்டும்

## பதவி கவிழ்க்கப்பட்ட ஜனாதிபதி வேண்டுகோள்

(இஸ்தான்புல்)

பாகிஸ்தானில் இராணுவ ஆட்சியாளர் ஜெனரல் முஷாரப்பினால் ஜனாதிபதி பதவியிலிருந்து தூக்கி

உலக தரிசனம்

எறியப்பட்ட முன்னாள் ஜனாதிபதி ரபிக் தராப் மேற்படி சர்வாதிகாரப் போக்குக் குறித்து முதற் தடவையாக நேற்று முன்தினம் கருத்து வெளியிட்டுள்ளார்.

ஜனாதிபதிப் பதவியில் இருந்து நீக்கப்படவிருக்கும் செய்தி தனக்கு ஒரு சில தினங்களுக்கு முன்னரே தெரியும் எனவும் கடந்த புதனன்று அரசியல் சாசன பிரகடனம் ஒன்றின் மூலம் தான் தூக்கி வீசப்பட்டதாகவும் தராப் தெரிவித்துள்ளார்.

முஷாரப் பதவியேற்றதற்கு ஓரிருதினங்களிற்கு முன்னர் தன்னை இராஜினாமாச் செய்யும்படி அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதாகவும், அதனைத் தான் மறுத்ததால் பலாத்காரமாக ஜனாதிபதிப் பதவியில் இருந்து தூக்கி வீசப்பட்டதாகவும் மேலும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, முஷாரப்பின் சட்டத்திற்கு மாறான செயலுக்குத்தான் எதிர்ப்புத் தெரிவிக்கப் போவதாகவும் முஷாரப்பின் சர்வாதிகார ஆட்சி குறித்து உலக நாடுகள் அவரைத் தட்டிக் கேட்க வேண்டும் எனவும் ரபிக் தராப் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

(உ-9)

## மகாகும்பாபிஷேகம்

சுவிற்சர்லாந்து அடிஸ்வில் ஸ்ரீ சிவசுப்பிரமணியர் ஆலயத்தில் சபரிமலை ஸ்ரீ ஐயப்ப சுவாமிக்கு பஞ்சகுண்டபக்ஷ மஹா கும்பாபிஷேகம் ஆனி உத்தரத் திருநாளான எதிர்வரும் 27 ஆம் திகதி புதன் கிழமை நடைபெறவுள்ளது.

''சர்வதேச இந்துமத குரு பீடாதிபதி'' ஸ்ரீ ஐயப்பதாஸ சாம்பசிவ சிவாச்சாரியார் கும்பாபிஷேக பிரதம குருவாகயிருந்து கிரியைகளை நடாத்தவுள்ளார்.

திங்கட்கிழமை மஹா கணபதி ஹோமத்துடன் பூர்வாங்க கிரியைகள் ஆரம்பமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது. [உ]

# மாபெரும் கொள்ளையனுக்கு 24 வருட சிறை

(வாஷிங்டன்)

அமெரிக்காவில் 1997 ஆம் ஆண்டு இடம் பெற்ற மாபெரும் கொள்ளைச் சம்பவத்தின் சூத்திரதாரிக்கு 24 வருட சிறைத்தண்டனை வழங்கப் பட்டுள்ளது.

அமெரிக்காவில் 18.9 மில்லியன் டொலர் பணத்தினை ஆயுதமுனையில் கொள்ளையடித்த நபருக்கே தற்போது மேற்படி தண்டனை வழங்கப் பட்டுள்ளது.

இக்கொள்ளைச் சம்பவத்தில் கொள்ளையடிக்கப்பட்ட பணத்திலிருந்து இன்னும் 10 மில்லியன் டொலர் மீட்கப்படவேண்டும்எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

(உ-9)

# 5 பிள்ளைகளைக் கொன்ற இராதிக்கு மரணதண்டனை

(லண்டன்)

கஸ்ரன் என்ற இடத்தில் 36 வயதுடைய பெண் ஒருவர் தனது 5 குழந்தைகளை படுகொலை செய்துள்ளார்.

நீண்டகாலமாக நோய்வாய்ப்பட்டிருந்த இந்தப் பெண் மனவிரக்திகாரணமாகவே இந்தக் கொலைகளைச் செய்துள்ளார் என பொலிஸாரின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுளளது.

12 வயதுடைய மூத்தமகனும் 6 மாதமுடைய கடைசி மகன்உட்பட 5பேரை கொலைசெய்த இந்தப்பெண்ணுக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ளது. (உ-7)

# கனேடியர்களுக்கு பட்டம் கொடுக்கும் உரிமை பிரிட்டிஷுக்கு இல்லை!

(ரொறன்ரோ)

கனேடியர்களுக்கு எந்தக் காரணங்களுக்காகவும் பிரித்தானியா சேர், மற்றும் பிரபுப்பட்டங்கள வழங்கக் கூடாது என்று கனேடியப்பிரதமர் ஜீன் கிரேசியன பிரித்தானியப் பிரதமர் ரொனி பிளேயரைக் கேட்டுள்ளார்.

கனேடியர்களுக்கு பிரித்தானியா இவ்வாறு சேர், பிரபுப்பட்டங்களை வழங்குவது கனேடிய ஜனநாயகத்திற்கு எதிரானது எனவும் இது குறித்த அறிவிப்புக்களை வெளியிடமுன் பிரிட்டன் கனடாவை கலந்தாலோசிக்க வேண்டியது அவசியமானது எனவும கனேடியப் பிரதமர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளேயருக்கு கனேடிய பிரதமரினால் அனுப்பிவைக்கப் பட்டுளள கடிதத்திலேயே மேற்கண்டவாறு தெரிவித்துளளார்.

கனடாவைச் சேர்ந்த இருவருக்கு பிரிட்டிஷ் அரசு அண்மையில் மேற்படி பட்டங்களை வழங்கியமையை கனேடியப் பிரதமர் சுட்டிக்காட்டி இக் கடிதத்தை அனுப்பியுள்ளார். (உ-9)

# அமெ-பிரி. விமானங்கள் ஈராக் மீது தாக்குதல் 23 பேர் பலியாகினர்

(பக்தாத்)

மேற்கு நாட்டு யுத்த விமானங்கள ஈராக் மீது தாக்குதல் நடத்தியதில் 23 பேர் கொல்லப்பட்டதாக அறிவிக்கப் பட்டுளளது.

அமெரிக்க மற்றும் பிரித்தானிய நாட்டு யுத்த விமானங்களே இத் தாக்குதலை மேற்கொண்டுள்ளன.

ஈராக்கின் வடக்கு நகரமான மொசோல் நகரத்தில் நடந்த இந்தத் தாக்குதலில் மேலும் 14 பேர் படுகாயமடைந்துள்ளதாகவும் படுகாயமடைந்தவர்களில் 4 பேரின் நிலை கவலைக்கிடமாகவுளளதாகவும் ஈராக் அறிவித்துள்ளது. (உ-7)

உ

சுவிஸ்ஸர்லாண்ட்- அடிஸ்வில்
ஸ்ரீ சிவசுப்பிரமணியர் ஆலயத்தில்
சபரிமலை ஸ்ரீஐயப்ப சுவாமி
மஹா கும்பாபிஷேகம்

கர்மாரம்பம்:-25.06.2001 திங்கட்கிழமை காலை -9 மணி
பஞ்சகுண்ட பக்ஷ மஹா யாகாரம்பம்:-
25.06.2001 திங்கள்- மாலை 6 மணி
நெய் அபிஷேகம் :- 26.06.2001 செவ்வாய்க்கிழமை
மஹா கும்பாபிஷேகம் :- ஆனி மாதம் 13 ம் திகதி
27.06.2001 புதன்கிழமை பகல் 12 மணி

பிரதிஷ்டா பிரதமகுரு:-
"சர்வதேச இந்துமத குருபீடாதிபதி"
சிவாகம கிரியா கலாநிதி
ஸ்ரீ ஐயப்பதாஸ சாம்பசிவ சிவாச்சாரியார். J.P

ஆலய பிரதம குரு :- "குகபூஜா துரந்தரர்
சிவஸ்ரீ
த. சரஹணபவானந்தக் குருக்கள்

சாதகாசிரியர் :- சிவாகம பூஷணம்
சிவஸ்ரீ . பால ஜெகன்நாதக் குருக்கள்
-இணுவில்-

மற்றும் பல குருமார்கள் கலந்து கிரியைகளை நடத்துவார்கள்.

-சுபம்-

இங்ஙனம்
ஆலய பரிபாலன சபையினரும்
உபயகாரர்களும்.

Adliswil
Switzerland

(C-8135)

குற்றம் வருமுன் காத்துக் கொள்ளாதவனுடைய வாழ்வு அழிந்து விடும்

குறள்

வலம்புரி

## வினையின் விளைவு

இனப்பிரச்சினையைத் தீர்த்து வைக்காததன் விளைவை இப்போது பொதுஜன ஐக்கிய முன்னணி அரசு அனுபவித்துக் கொண்டிருக்கிறது.

ஒரு காலத்தில் தமிழர்களின் உரிமைகளை சிங்களப் பேரினவாதத்தால் அடக்க முடியும் என்று நாட்டின் இரு பிரதான கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சியும் சுதந்திரக் கட்சியும் நம்பியிருந்தன. இந் நம்பிக்கைக்கு அமைவாகவே அவற்றின் செயற் பாடுகளும் திட்டங்களும் அமைந்திருந்தன

அன்று இரண்டு கட்சிகளும் ஆள்மாறி ஆள் தமிழர்களுக்கெதிரான அராஜகங்களை மேற்கொண்டு வந்தமை வரலாற்று உண்மை.

தமிழ் மக்கள் அராஜகத்திற்கு எதிராகப் போராட்டத்தை ஆரம்பித்த போது இனப் பிரச்சினையை தீர்க்க வேண்டும் — ஆறு மாதத்திற்குள் தீர்ப்போம் என்ற பிரச்சாரத்தினூடாக ஆட்சிப் பீடத்தை பேரினவாதிகள் கைப்பற்றினர்.

எனினும் இனப்பிரச்சினை தீர்க்கப்பட்டதாக இல்லை

இப்போது இனப்பிரச்சினை தீர்க்கப்படவில்லை என்ற காரணத்தைக் காட்டி அரசைக் கவிழ்க்கும் அளவிற்கு நிலைமை முற்றியுள்ளது.

ஐ.தே.கட்சி பொதுஜன ஐக்கிய முன்னணி அரசுக்கு எதிராகக் கொண்டு வரும் நம் க்கையில்லாப் பிரேரணையை தோற்கடிப்பதற்கு விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்குவதன் மூலம் தமிழ்க் கட்சிகளின் ஆதரவை அரசு மிக எளிதில் பெற்றுக்கொள்ள முடியும். ஆனால்அரசுஇதுவரைதமிழ்க்கட்சிகளை அழைத்து தமக்கு ஆதரவு நல்குமாறு கேட்கவில்லை.

ஏனெனில் தமிழ்க் கட்சிகளிடம் அப்படியொரு கோரிக்கையை முன்வைத்தால் அவர்கள் முதலில் கேட்பது புலிகள் மீதான தடையை நீக்கவேண்டும் என்பதாகவே இருக்கும் அரசுககு புலிகள் மீதான தடயை நீக்கும் எண்ணமோ அல்லது சமாதானப் பேச்சு வார்த்தையைத் தொடரும் எண்ணமோகிடையாது என்பதாலேயே தமிழ்க்கட்சிகளின்பக்கம் தலை வைக்கவில்லை.

இப்போதுஅரசு தப்புமா பிழைக்குமா என்பதைத் தீர்மானிக்கும் பிரம்மாவாக ஜே.வி.பி. உள்ளது.

# ஆயிரத்திற்குமேற்பட்ட கவிதைகளை ஆக்கிய கவிஞர் யாழ். ஜெயம் ஆற்றிய சேவைகளனந்தம்

இன்று அன்னாரின் 31 ஆம் நாள் அஞ்சலி தினமாகும்

யாழ்ப்பாண மண்ணில் பிறந்து யாழ்ப்பாண மண்ணிலேயே கவிபாடித்திரிந்து, பெரும் கலைச் சேவையை ஆற்றியவர் மறைந்த யாழ்: ஜெயம் என அழைக்கப்படும் ம. விக்ரர் ஆவார்.

### பிறப்பு

ஆயிரத்து தொள்ளாயிரத்து இருபத்து இரண்டாம் ஆண்டு ஆனிமாதம் இருபத்து மூன்றாம் நாள் யாழ். மண்ணில் பிறந்தார். இவர் சிறு வயதிலிருந்தே அளவற்ற மனிதநேயமும், மற்றவர்களுடன் பண்பாகப் பழகும் இயல்பும் அன்பும், பணிவும் உள்ளவராக இருந்தார்;

### வாழ்க்கை

தமிழ்மொழிப் பற்றும், கவிபாடும் திறனும் உடைய இவர் வெளிநாடு செல்வதற்குரிய பல்வேறு சந்தர்ப்பங்கள் வந்தபோதும், அவற்றையெல்லாம் உதறித்தள்ளி விட்டு பிறந்த மண்ணில் வாழ்ந்து அளப்பரிய சேவைகள் ஆற்றினார்;

ஏறத்தாழமுப்பத்து இரண்டு ஆண்டுகளாக ஆசிரியப் பணியில் தன்னை ஈடுபடுத்தி, பண்பும் ஆளுமையும் நிறைந்த மாணவ மணிகளை உருவாக்கியபெருமை இவருக்குண்டு:

ஐம்பதுக்கும் அதிகமான ஆண்டுகள் தன்னை கவிதைத் துறையிலும். எழுத்துத்துறையிலும் அமிழ்த்தி அளப்பரிய சாதனைகள் புரிந்துள்ளார்.



### கவிதைகள்

இலக்கிய உலகில் கவிதைத் துறையில்தன்னை ஈடுபடுத்தி, ஆயிரத்துக்கும் அதிகமான கவிதைகளைப் பல பத்திரிகைகளுக்கும் சஞ்சிகைகளுக்கும் எழுதியுள்ளார்:

இவரது கவிதைகள் பாதுகாவலன்வீரகேசரி, தினகரன், ஈழநாடு. சுதந்திரன் போன்ற பத்திரிகைகளிலும் நான், புதிய உலகம், விவேகி முதலிய சஞ்சிகைகளிலும் வெளிவந்துள்ளன;

மேலும் வானொலியிலும், இலக்கிய அரங்குகளிலும், கவியரங்குகளிலும் பங்கு பற்றிப் பலஅறிஞர்களின் வாழ்த்துக்களையும்பாராட்டுக்களையும் பெற்றவர்;

கொழும்பு தமிழ்ச்சங்கம், அவுஸ்திரேலிய தமிழ்ச் சங்கம் நடத்திய உலகளாவிய கவிதைப் போட்டிகளில் பரிசில்களையும் பெற்றுள்ளார்;

### நூல்கள் வெளியீடு

கவிஞர் பல்வேறு ஆன்மீக, மதத்தத்துவங்களை,வரலாறுகளைக் கூறும் நூல்களையும் வெளியிட்டுள்ளார். புறாவே பற, இதயவீணை, புனித சூசையப்பர் அம்மானை, புனித யோசவ்வாஸ் அம்மானை, சிந்தை இனிக்கும் செல்வம், புனித ஆசீர்வாதப்பர் அம்மானை ஆகிய நூல்களை அவர் எழுதி வெளியிட்டுள்ளார்.

பாவாகும்.

### மறைவு

இரண்டாயிரத்தோராம் ஆண்டு வைகாசி மாதம் இருபத்து இரண்டாம் தேதிதான் பிறந்த மண்ணான யாழ். மண்ணிலேயே நிறைவுடன் அமரத்துவமடைந்தார்.

இக் கவிஞரின்மறைவுயாழ். மண்ணிற்கும், குறிப்பாக யாழ். கத்தோலிக்க திருச்சபைக்கும் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்.

### அடுத்த நூல்

இக்கவிஞரால் சேகரித்தும், எழுதப்பட்டும் வைத்துள்ள பல பொன்மொழிகளை ஒன்று சேர்த்து அவரையும் அவரதுகலைப்பணி வாழ்வையும் கௌரவிக்கும் முகமாக யாழ். திருமறைக் கலாமன்றத்தினர், தேடிக்குவித்த திரவியங்கள், எனும் நூலை வெளியிடவுள்ளனர்.

எதிர்வரும் இருபத்து மூன்றாந் திகதி அமரர் ம. விகரர் (யாழ்.ஜெயம்) அவர்களது முப்பத்தோரம் நாள் நினைவும் எழுபத்தொன்பதாவது ஜனன ஆண்டுப் பூர்த்தியுமாகும். இந்த நாளில் இக் கவிஞருக்கு நாமும் அஞ்சலி செய்து அவர் ஆன்மா சாந்தி பெற பிரார்த்திப்போமாக.

**ஆ. ஜென்சன் றொனால்ட்**
(ஈச்சமோட்டை)

### முதுமையிலும் கவிதை

தமது இயலாக்காலத்திலும் கவிதைகளை எழுதிக் கொண்டேயிருந்த கவிஞர் யாழ். ஜெயம் அவர்கள். இறுதியாக எழுதியகவிதையாழ். திருமறைக் கலாமன்றம் அண்மையில் நடத்திய தமிழ் விழாவில் பேராசிரியர் அ. சண்முகதாஸ் அவர்களுக்குநிகழ்த்திய பாராட்டு விழாவில் அவரை வாழ்த்தி எழுதிய வாழ்த்துப்

# அரசும், விடுதலைப் புலிகளும் சமாதான பேச்சுக்களுக்கு தடையாக இருக்கக் கூடாது

## பிரித்தானிய அரசு சார்பில் தூதுவர் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

எமக்கு சமாதானம் தான் தேவை. நாம் யுத்தத்தை நிராகரிக்கின்றோம். எமது மக்கள் மத்தியில் ஆன்மீகத் துறை மூலம் யுத்தத்தை நிராகரிக்கும் தீவிரமான நிலைப் பாட்டினை விரைவில் உருவாக்க உள்ளோம் என சர்வதேச இந்துக் குருமார் சங்கப் பிரதிநிதிகள் பிரித்தானியத் தூதுவர் லிண்டாடபீல்டிடம் தெரிவித்துள்ளனர்;

ஈ.பி.டி.பியின் யாழ். மாவட்டத் தலைமைச் செயலகத்திற்குச் சென்ற சர்வதேச இந்துக் குருமார் சங்கப் பிரதிநிதிகள், அங்குஅமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கும் பிரித்தானிய தூதுவர்லிண்டாடவ்பீல்ட்டுச்கும் இடையில் நடைபெற்ற கலந்துரையாடலில் கலந்து கொண்டார்கள்.

வலி தென்மேற்குப் பிரதேச சபைத் தலைவர் ந.திரிலோகநாதன், நல்லூர் பிரதேச சபைத் தலைவர் க மணிபல்லவராஜன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்தும்வகையில் பிரித்தானிய அரசாங்கத்தின் நிலைப்பாடுகளை விளக்கிய பிரித்தானியத் தூதுவர் லிண்டாடபீல்ட் இந்துக் குருமார்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில்,

இலங்கையில் நிலவும் பிரச்சினைக்கு சமாதானப் பேச்சு வார்த்தை மூலம்தீர்வுகாணப் படுவதையே எமது அரசுதீவிரமாக நம்புகின்றது.

யுத்தம் மூலம் தீர்வுஎதனையும் பெற்றுக்கொள்ள முடியாது. சர்வதேசம் இப்பிரச்சினையில் காட்டி வரும் அக்கறையை அரசும் புலிகளும் பயன்படுத்திக்கொள்ளவேண்டும்;

பேச்சு வார்த்தையின் முன்னேற்றத்திற்காகஇருதரப்பும் விட்டுக் கொடுப்புகளுடன் இருக்க வேண்டும்: பேச்சு வார்த்தையின் முன்னேற்றத்திற்கு தடையாக இருக்கக் கூடாது.

இதனை பிரித்தானிய அரசு சார்பில், புலிகளுக்கும்அரசிற்கும்செய்தியாகவிடுகின்றேன். இவ்வாறே சமாதானம் குறித்த உங்கள் கருத்துக்களை அரசிற்கும் புலிகளுக்கும் தெரியப்படுத்துங்கள் எனத் தெரிவித்தார்; (உ)

## திருநாள் திருப்பலி

(யாழ்ப்பாணம்)

விளான் புனித யுவானியார் ஆயல வருடாந்த திருநாள் திருப்பலி நாளை ஞாயிற்றுக் கிழமை நடைபெறவுள்ளது.

இன்று மாலை4 30 மணிக்கு நற்கருணை வழிபாடும் நாளை காலை 7:30 மணிக்கு திருநாள் திருப்பலியும் புனிதரின் திருச்சொரூப பவனியும் ஆசிரும் இடம்பெறவுள்ளன; (உ-7)

# மீனவர் பிரச்சினைகளுக்கு தீர்வு நிரந்தர சமாதானம் மூலமே

## பிரி.தூதுவர் தெரிவிப்பு

[யாழ்ப்பாணம்]

யாழ் குடாக்கடலில் மீன் பிடிப்பதற்குநிலவுகின்றஇடர்களை நீக்குவதற்கு உதவுமாறு, யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்ட பிரித்தானியத் தூதுவர் லிண்டாடபீல்டிடம்,யாழ். மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நேற்றுக்காலை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுடன் பேச்சுகளை முடித்துக் கொண்டு திரும்பிய பிரித்தானியத் தூதுவரிடம், யாழ். மீனவர்கள் தமது கோரிக்கைகளை ஈ.பி.டி.பியின் யாழ். மாவட்டத் தலைமைச்செயலகவாசலில்வைத்து கையளித்தனர்.

இந்த மகஜர் கையளிப்பில் குருநகர் ,பாஷையூர் கடற்றொழிலாளர் சங்கங்களைச் சேர்ந்த மீனவர் சங்கப் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

மீனவர் பிரதிநிதிகளின் மகஜரைப் பெற்றுக்கொண்ட பிரித்தானியத் தூதுவர், உங்களது கஷ்டங்களை நான் புரிந்து கொள்கின்றேன். உங்களைப் போன்ற தொழிலாளர்கள் தான் யுத்த நடவடிக்கைகளினால் பெருமளவிற்கு பாதிக்கப்பட்டுள்ளார்கள்;

இந்நிலைமையை நிரந்தரமான சமாதானம் ஏற்படுத்துவதன் மூலம்தான் முற்றிலுமாக மாற்றியமைக்க முடியும். எமது அரசாங்கம் சமாதானம் மூலம் பிரச்சினைக்கு தீர்வு காண்பதையே வலியுறுத்துகின்றது.என்று மீனவர்கள் மத்தியில் தெரிவித்தார்; (உ)

## மீள்குடியேற்றக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

ஊகதடி மீள்குடியேற்றம் தொடர்பான கூட்டம் ஒன்று எதிர்வரும் திங்கட்கிழமை மு.ப 10. 00 மணிக்கு வடக்கின் அபிவிருத்தி புனர்வாழ்வு புனரமைப்பு மற்றும் வடக்கு-கிழக்கு தமிழ்மொழி விவகார அமைச்சர் அலுவலகத்தில் நடைபெறும் எனவும், இதில் சம்பந்தப்பட்ட அனைவரையும் கலந்து கொள்ளுமாறும் மேலதிக அரசாங்க அதிபர் து. வைத்திலிங்கம் தெரிவித்துள்ளார்; [உ]

# அரசு ஆட்சியை தக்கவைத்தாலும் அவசரகாலச் சட்டத்தில் தோல்வியே

## அரசியல் அவதானிகள் ஆரூடம்

பொதுஜன ஐக்கியமுன்னணி அரசின் ஆயுள் நீடிப்பு ஜே-வி. பியின் கையிலிருக்கும் நிலையில், அரசு தப்பிப் பிழைத்தாலும் தொடர்ந்து அவசரகாலசட்டத்தை நீடிக்க முடியாமல் போகுமென அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

ஐக்கிய தேசியக்கட்சியின் நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு எதிராக ஜே.வி.பி. வாக்களித்தாலும், அவசரகால சட்டத்தை எதிர்த்தே வாக்களிக்கும்.

இதனால் தொடர்ந்து அவசரகாலசட்டத்தை நிறைவேற்ற முடியாதஇக்கட்டான நிலை அரசுக்கு ஏற்படுமெனவும், அவ்வாறு அவசரகாலச் சட்டம் தோற்கடிக்கப்படுமாயின் நீண்டகாலமாக விசாரணை எதுவுமின்றி சிறையில் வாழும் பல தமிழ் இளைஞர்கள் விடுதலை பெறுவர் எனவும் நம்பப்படுகிறது.

இது தொடர்பாக நீதி அமைச்சர் பட்டி வீரக்கோன் கருத்துத் தெரிவிக்கையில், அவசரகாலச் சட்டத்தின் பிரகாரமே புலிகள் மீது தடை விதிக்கப்பட்டுள்ளது. இந் நிலையில் அவசரகாலச் சட்டம் தோற்கடிக்கப்படுமாயின், புலிகள் மீதான தடையும் சுயமாகவே நீங்கிவிடும் என்றும் கூறினார். (ந)

---

**நம்பிக்கை...**

தால்சிஹலஉறுமயவின் பாராளுமன்ற உறுப்பினர் சம்பக்க ரணவக்க ஒப்பமிட வில்லையெனத் தெரிவித்துள்ளார்.

இதே வேளை ஜே. வி. பியின் மத்தியகுழு இன்று கூடி நம்பிக்கையில்லாப்பிரேரணை தொடர்பாக தீர்மானிக்கவுள்ளது. (வ)

---

**அரசு**

சாங்கத்துடன் எமக்கு எதுவித கருத்து வேறுபாடும் இல்லை மாறாகஜனாதிபதி மீதும் அரசாங்கத்தின்மீதும் முழு நம்பிக்கையுடன் செயற்பட்டு வருகின்றோம்.

ஜனாதிபதி கூறுவதுபோல் இந்தஅரசாங்கம் வீழ்ச்சி அடைவதற்கான ஆபத்து எதுவும் ஏற்படுவதற்கில்லை என்றும் அவர்மேலும் கூறியுள்ளார். [ந]

---

**நாகம்ஸ்**
(சுன்னாகம்)
விஜயகாந்,
மீனா
நடித்த
**சேதுபதி IPS**
தினசரி [ரீல்ஸ்]
11-00, 2-30[பு. நே]
(சனி, ஞாயிறு தினங்களில் 6 மணிக்கு விசேட காட்சி காண்பிக்கப்படும்
(3264)

---

**ஐ. தே. க.**

வர்கள் கருஜெசூரிய, லொக்கு பண்டார, காமினி அத்துக்கோறளை ஆகியோர் தெரிவித்தனர்.

இச்செய்தியாளர் மநாட்டில் அவர்கள் மேலும் தெரிவிக்கையில் அரசு மீது தாம் கொண்டு வந்துள்ளஇந்த நம்பிக்கை யில்லாத் தீர்மானம் நிச்சயம் வெற்றி பெறும்.

இந்த வெற்றியை அடுத்து ஐக்கியதேசியக்கட்சிஆட்சியை அமைக்கும் என்று நம்பிக்கை வெளியிட்டுள்ளனர். (வ)

---

# அமைச்சர்களுக்கு ஜனாதிபதி உத்தரவு

(கொழும்பு)

வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளமுக்கியமான அமைச்சர்களை உடனடியாக நாடு திரும்புமாறு ஜனாதிபதி சந்திரிகாகுமாரதுங்கா அவசர உத்தரவுச் செய்தியை வெளிநாடுகளில் உள்ள அமைச்சர்களுக்கு அனுப்பிவைத்துள்ளார்.

அமெரிக்கா சென்றுள்ள அமைச்சர் மங்கள சமரவீர, மலேஷியாவுக்கு விஜயம்செய்துள்ள அமைச்சர் எஸ், பி. திஸநாயக்கா, ஆகியோரை உடனடியாகநாடுதிருப்புமாறு ஜனாதிபதி கேட்டுள்ளார். (வ

---

## கூட்டங்கள்

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் செயற் குழு இன்று கூடி முக்கியமான சில முடிவு களை எடுக்க வுள்ளது.

இதேவேளை ஜே.வி.பியின் மத்தியகுழுவும் இன்றுகூடிமுக்கிய தீர்மானங்களை எடுக்க வுள்ளது, [ம]

---

# அரசின் சமாதான முயற்சிக்கு ஐ.தே. கட்சி ஆதரவு வழங்கும்

## ஜனாதிபதி-ரணில் சந்திப்பில் இணக்கம்

(கொழும்பு)

பொதுஜனஐக்கிய முன்னணி அரசுக்கு தற்போது ஏற்பட்டுள்ள இக்கட்டானசூழ்நிலையிலும் இனப் பிரச்சினை தொடர்பான சமாதான முயற்சிகளில் அரசும் எதிர்க்கட்சியும் இணைந்து செயற்படுவதற்கு ஜனாதிபதி சந்திரிகாவும்எதிர்க்கட்சித் தலைவர் ரணில்விக்கிரமசிங்காவும் இணங்கியுள்ளனர்.

ஜனாதிபதி சந்திரிகாவும், எதிர்க்கட்சித்தலைவர்ரணில் விக்கிரமசிங்காவும் நேற்று முன்தினம் நள்ளிரவுசந்தித்து பேசியதை அடுத்தேஇந்த இணக்கப்பாட்டுக்குவந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இவ்இணக்கம் தொடர்பாக ஜனாதிபதி செயலகம் அறிக்கைஒன்றையும் விடுத்துள்ளது.

ஜனாதிபதி செயலகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

சமாதான முயற்சிகளை மீண்டும் முன்னெடுத்துச் செல்வதற்கு அரசும் ஐக்கிய தேசியட்சியும் ஆக்கபூர்வமான சமாதானப் பேச்சுவார்த்தைகளை நடத்துவது என்றும் அரசாங்கத்தின் சமாதான முயற்சிகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவதெ ன எதிர்கட்சித்தலைவர் ஜனாதிபதியிடம் உறுதி அளித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (வ)

---

**இரு.**

மாலை 4.30. மணியளவில் இச்சம்பவம் இடம் பெற்றது.

மேட்டார் சைக்கிள் படைப் பிரிவினர் திடீரென சுற்றிவளைத்து மேற்கொண்டதுப்பாக்கிப் பிரயோகத்தின் போதே இரு இளைஞர்களும் கொல்லப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி இரு சடலங்களும் யாழ்.போதனா வைத்தியசாலையில் படையினரால் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (ந-8)

---

**ஐ.தே.கட்சி...**

ஆதரவாக வாக்களிக்கவுள்ளதாக சிங்கள நாளிதலொன்று நேற்று செய்தி வெளியிட்டுள்ளது

இதேவேளை ஆளும் கட்சியிலிருந்து பத்துப் பாராளுமன்ற உறுப்பினர்கள் தம்பக்கம் வருவார்களென ஐக்கிய தேசியக்கட்சிஉறுதிபடத்தெரிவித்துள்ளது. (ந)

**ராஜா**
**யாழ்ப்பாணம்**
லக்கிஸ்டார் அஜித்
(9 வேடங்களில்)
வசுந்தராதாஸ்,
மீனா, நக்மா
மற்றும் பலர் நடித்த
STR பிலிம்ஸ்
**சிட்டிசன்**
தினசரி: 10-30, 2-00
5 00 [பு நே]
(கி-2125)

---

## சங்காபிஷேகம்

(கொழும்பு)

கேகாலை கந்தலோயா தோட்டம் கீழ்ப்பிரிவு அருள்மிகு ஸ்ரீமுத்துமாரி அம்மன் தேவஸ்தான கும்பாபிஷேக தின மஹா சங்காபிஷேகம் இன்று பகல் 12.00 மணியளவில் நடைபெறவுள்ளது.

சர்வதேச இந்துமத குரு பீடாதிபதி ஸ்ரீஜயப்பதாஸ சாம்பசிவ சிவாச்சாரியார் தலைமையில் இடம் பெறும் இச் சங்காபிஷேகத்தைத் தொடர்ந்து ஐந்து நாட்களுக்கு அலங்காரத் திருவிழா இடம் பெறும். (உ)

---

**நிறைவேற்ற**

பிற்கும் ஆப்பு வைத்துள்ளது.

அரசு மேற்கொள்ளும் சமாதான முயற்சிகளைக்குழப்பக்கூடாதென நாம் முன்னர் சில தீர்மானங்களை மேற்கொண்டிருந்தோம்.

கடந்த ஆறு வருடங்களாக மக்கள் அனுபவித்து வந்த துன்பங்களுக்கு விரைவில் விடிவு ஏற்படுமென்றும், சமாதானப்பேச்சுவார்த்தையை விட்ட இடத்தில் இருந்து தொடரவுள்ளதாகவும், யுத்தத்தை நிறுத்தி சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதாகவும் ஐக்கியதேசியக்கட்சி எமக்கு வாக்குறுதி அளித்துள்ளது.

இந் நிலைப்பாட்டில்தான் ஐக்கியதேசியக்கட்சிக்கு ஆதரவு வழங்க தீர்மானித்துள்ளோம் என்றும் ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார். (வ)

---

## இரு ஊர்காவல் படையினர் பலி

மட்டக்களப்பு அம்பாறை மாவட்டத்தின் எல்லைக்கிராமத்திலும், மட்டக்களப்பு பொலநறுவை மாவட்டத்திலும் விடுதலைப்புலிகள் மேற்கொண்ட தாக்குதல்களின் போது இரண்டு ஊர்காவல் படையினர் கொல்லப்பட்டுள்ளனர். (ம)

## தெளிவுசஞ்சிகை இன்று வெளியீடு

யாழ். தென்னிந்தியத்திருச்சபையினரால் தெளிவு எனும் சஞ்சிகை இன்றுவெளியிடப்படவுள்ளது. (உ-52)

---

**புலிகள்**

லப்பட்டார்.

இச்சம்பவத்தின் போது மோட்டார்சைக்கிலில் பயணம் செய்தநாகராஜா மோகன் [வயது24)என்ற பொதுமகன் ஒருவரும்உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந)

---

**பேரியல்**

ஆகிய இடங்களில் ஆயிரக்கணக்கான முஸ்லிம்மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்;

இவ்வார்ப்பாட்டத்தின் போது திருமதி பேரியல் அஷ்ரப், மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களான யு எல்ஏஎம் மொகைதீன் மருதூர்க்கனி ஆகியோரின் கொடும்பாவிகளும் எரிக்கப்பட்டன; [ந]

---

K. C. C. C. SPORTS CLUB
**ஆறுமுகம் கமலநாதன்**
(முன்னாள் உதவிக்கல்விப்பணிப்பாளர்,
வலிகாமம் வலயம்)
**ஞாபகார்த்த**
துடுப்பாட்ட சுற்றுப்போட்டி
**- 2001 -**
6 a SIDE 5 OVERS (தோல் பந்து)
**இறுதிப்போட்டி**
திகதி: 24.06.2001 நாளை ஞாயிற்றுக்கிழமை 12.00 மணிக்கு
இடம்: கொக்குவில் இந்துக்கல்லூரி மைதானம்
பிரதம விருந்தினர்: திரு. K. சிவாஜி
(அதிபர் சுன்னாகம் ஸ்கந்தவரோதயா கல்லூரி)
சிறப்பு விருந்தினர்: திரு. பொ. கமலநாதன்
(அதிபர் கொக்குவில் இந்துக்கல்லூரி)
குறிப்பு: தெரிவுப் போட்டிகள் யாவும் இன்று சனிக்கிழமை நடைபெறும்
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
செயலாளர் சுற்றுப்போட்டி குழு.
[3274]


மின்னிடும் அசல் 22 கரட் தங்கநகைகளை உங்கள் எண்ணம்போல் தெரிவுசெய்திட
**நியூ நகுலா ஜுவல்லறி**
74, கதுரியார் வீதி, - - - யாழ்ப்பாணம்
நியூ லலிதாஸ் ஜுவல்லறி
171, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
நகுலா நகைமாடம்
241G, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
[கி-3137]

இப் பத்திரிகை "வலம்புரி" அன்கோ ஸ்தாபனத்தாரால் இல. 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2001ம் ஆண்டு யூன் மாதம் 23-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.